விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 10 வெள்ளிக்கிழமை (25.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 06




# தமிழ் மக்களின் நலன் கருதியதாகவே கூட்டமைப்பின் முடிவு அமையும்!



## சம்பந்தன் எம்.பி. உறுதியளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முடிவு தமிழ் மக்களின் நலன் கருதியாக இருக்குமே தவிர வேறு எந்த வகையிலும் முரணாக அமையாது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். 2005 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சார்பாக எடுக்கப்பட்ட முடிவு தவறானது என்பதனால்தான் இன்று பல்வேறுபட்ட இன்னல்களை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (16ஆம் பக்கம் பார்க்க)




## கூட்டமைப்பின் கோரிக்கைகளை சரத் ஏற்றுக் கொண்டுள்ளாராம்!

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா மற்றும் ரணில் உடனான கலந்துரையாடலில் கூட்டமைப்பினர் முன்வைத்த எட்டு முக்கிய விடயங்க ளை சரத் பொன்சேகா ஏற்றுக் கொண்டுள்ளதாக கொழும்பு இணையத் தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

12ஆயிரம் புலி உறுப்பினர்களையும் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கவேண்டும், உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல், வடக்கு கிழக்கில் இராணுவத்தினரின் பிரசன்னத்தை குறைத்தல், இடம் பெயர்ந்த மக்களை முழுமையாக விடுவித்து துரித மீள் குடி யமர்வினை (16 ஆம் பக்கம் பார்க்க)

## பழுதடைந்த அரிசி குறித்து முறையிட அமைச்சர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிவாரணமாக பழுதடைந்த அரிசி வழங்கப்பட்டால் உடனடியாக தனது கவனத்திற்கு கொண்டு வருமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் பொதுமக்களுக்கு தற்போது நிவாரணமாக வழங்கப்பட்டு வரும் வெள்ளைப் பச்சை அரிசி மக்கள் பாவனைக்கு உகந்ததாக இல்லை என்றும் இவ்வரிசி பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும் பொது மக்களில் பலர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## முகாமிலிருந்து சென்ற 2180 பேர் திரும்பவில்லை?

(வவுனியா)

வடபகுதியிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாமிலிருந்து வெளியேறிய 2 ஆயிரத்து 180 பேர் இதுவரை முகாம்களுக்குத் திரும்பவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

முகாம் வாசிகளுக்கு சுதந்திரமாக நடமாட அனுமதித்ததை அடுத்து இவர்கள் வெளியிடங்களுக்குச் சென்ற நிலையில் மீளத் திரும்பவில்லையெனவும் அதில் கூறப்பட் டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குள் பிரபாகரனின் ஆவி புகுந்துள்ளதாம்!

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதியும் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகாவின் உடலுக்குள் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆவி புகுந்துவிட்டதாக சிறிலங்கா சுதந்திரகட்சியின் கொலன்னாவ தேர்தல் தொகுதி பிரதான அமைப்பாளர் ஆர்.துமிந்தசில்வா தெரிவித்தார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

ஜெனரல் சரத் பொன்சேகா வங்குறோத்து அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு இராணுவத்தைப்பற்றி பேசுகிறார். ரவீந்திர சில்வா, பிரசன்ன (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று பிற்பகல் 2 மணிக்கு இடம் பெற்ற இந்த பேரணியில் அரசாங்கத்தை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

விடுதலை புலிகளை வெற்றிகொண்ட ஸ்ரீலங்கா அரசாங்கத்தை காட்டிக்கொடுக்க ஜெனரலுக்கு வெட்கம் இல்லையா? ஐக்கிய தேசிய கட்சிக்கு வெட்கம் இல்லையா? என எழுதப்பட்ட (16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேசியாவில் உள்ள ஈழ அகதிகளில் ஒருவர் மரணம்

(கொழும்பு)

இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 254 இலங்கைத் தமிழ் அகதிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக தமிழ் அகதிகள் ஐ.நா. செயலர் பான் கீ மூனுக்கு விடுத்துள்ள செய்தி வருமாறு,

இந்தோனேசியாவின் மெராக் துறை முகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 254 இலங்கைத் தமிழ் அகதிகளில் ஒருவர் உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்படாத காரணத்தினால் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. கிரிஸ்டின் அல்லது ஜேகப் எனப்படுகின்ற 29 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் தரம் 4 பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை நடை பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பிரபல ஆரம்பிப்பாளர் என்.வைரவநாதன் மற்றும் இலங்கை மெய் வல்லுநர் சங்க உப தலைவர் எம்.தெய்வேந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளார்கள்.

எனவே இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளோர் தவறாது இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயனடையுமாறு யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர் சங்கம் அறிவித்துள்ளது.

மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் தரம் 4க்கான பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு)

## தமிழ் பாட்டுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

தமிழ்க் கவிதைகளை உற்சாகத்துடன் இயற்றுவதற்காக இலங்கை மற்றும் சர்வ தேச மாணவ மாணவிகள் பங்கு கொள்ளும் தமிழ்ப் பாட்டுப் போட்டி ஒன்றினை மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் இயற்கை அழகு என்ற தலைப்பில் மூன்று அடிகள் உள்ளடக்கப் பட்டதாக பாட்டு இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை The Monitors International Mezzanine floor Merchant Towers,col-13 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (சு)

## கிறிஸ்து பிறப்பின் வழிபாடு

மருதனார் மடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் கிறிஸ்து பிறப்பின் வழிபாடு, தூய நற்கருணை திருவழிபாடு என்பன இன்று காலை 6.30மணிக்கு நடைபெறும். நாளை பிற்பகல் 3மணிக்கு கிறிஸ்து பிறப்பின் பஜனை இடம் பெறும். (சு)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்திய பெருமை மகிந்தவுக்கே!

## சீ.வீ.கே.சிவஞானம் சாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவு படுத்தி அக் கட்சிக்குள்ளேயே குழப்பத்தை ஏற்படுத்திய பெருமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கே உள்ளது என யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தை பொறுத்தவரையில் இலங்கையில் உள்ள எல்லா கட்சிகளையும் பிரித்த சாதனை உண்டு. அதிலும் எவராலும் பிரிக்கமுடியாமல் 6 வருட காலமாக ஒற்றுமையை காத்து அரசியல் ஒழுங்கமைப்பை கொண்ட தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்திய பெருமை இவ் அரசாங்கத்திற்கே உண்டு.

முக்கியமான காலகட்டத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி தமிழ் மக்களை பகடக்காய்களாக பயன்படுத்தி அரசியல் நாடகத்தை அரங்கேற்ற அரசு முயல்கின்றது.

எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இவ் அரசாங்கம் வெற்றியடைவதற்காக கடைப்பிடிக்கும் ஓர் அணுகுமுறையானது வடக்கு கிழக்கில் அரசாங்கத்திற்கு எதிரான தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் பிரதான எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கு செல்வதை தடுக்கும் நோக்குடன் சில வேட்பாளர்களை மறைமுகமாக செயற்படுத்துவதன் மூலம் களம் இறக்கியுள்ளது.

இவ் அரசாங்கம் இதுவரைக்கும் இலங்கையை ஆட்சி செய்த எந்த அரசாங்கம் செய்யாத கெடுதிகளையும், அழிவுகளையும்,இனப் படுகொலையும் ஏற்படுத்தி இலட்சக்கணக்கான மக்களை முட்கம்பிக்குள் அடைத்து வைத்து அரசியல் நடத்துகின்றது.

இன்றும் கூட சுயமாக அச்சம் இல்லாமல் பேசவும் சுதந்திரமாகவும் செயற்படும் சூழ் நிலை இல்லை.13ஆவது திருத்தச் சட்டம் பற்றியே அரசாங்கம் பேசுகின்றது.

இதற்கு பின்னர் சந்திரிகா அரசாங்கம் முன்வைத்த பிராந்தியங்களின் இணைப்பு என்ற யோசனை இதிலும் பார்க்க மேம்பட்டது.அது சமஷ்டி கட்டமைப்பின் மூலம் சுய நிர்ணய அடிப்படையிலான ஒரு தீர்வை முன்வைத்துள்ளது.

ஆகவே 13ஆவது திருத்தச்சட்டம் பற்றி பின்னோக்கிச் சென்று பரிசீலிக்க அது அர்த்தமற்றது. இந்நிலையில் வெள்ளக் கொடியுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளை கொன்றது என்ற விடயத்தில் இந்த யுத்தம் ஒரு சாட்சியமற்ற யுத்தமாக முன்னெடுக்கப்பட்டது என்பது உலகம் அறிந்த உண்மை.

ஆகவே இச்சம்பவம் பற்றி விபரிக்காமல் சம்பவத்தின் உண்மைத் தன்மையை சர்வ தேசத்திற்கு விளக்க வேண்டும்.

ஆயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தீர்க்கமான தீர்வு யோசனை எதையும் முன்வைக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ச-7)


## யாழ் A/L மாணவர்களுக்கான பொங்கல் பரிசு!



பிரித்தானிய வெஸ்மினிஸ்ரர் பல்கலைக்கழக முதலாம் ஆண்டுக் கற்கை நெறி 2010 ஜனவரி, 14 ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்.

இலங்கை பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை என்ற துயரமா? கவலையை விடுங்கள்.

A/L மூன்று பாடங்களில் சித்தியுடன் உலகம் முழுவதும் அங்கீகாரம் பெற்ற UK-UNIVERSITY OF WEST MINSTER பல்கலைக்கழகத்தின் மூன்று வருட தரமான கற்கை நெறிகளை யாழ்ப்பாணத்தில் உள்வாரியாக கற்று குறித்த காலத்தில் பின்வரும் பட்டங்களைப் பெற்று கல்வி ஆளுமை மிக்கவராக மாறுங்கள்.

- B.Eng. Hons in Software Engineering
- B.Sc.Hons in Information Systems With Business Management

இக் கல்விநெறி பயில மூன்று வருடங்களும் மொத்தம் ஏறத்தாழ 10 இலட்சம் ரூபா தேவை. நல்வாழ்வுக்கான முறையான முதலீடு கல்வியே.

யாழ் மாணவருக்குப் பொங்கல் பரிசாகப் பொங்கல் அன்றே மேற்படி கற்கை நெறிகளின் முதலாம் ஆண்டுக்கான வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றன.

*மேலதிக விபரங்களை அறிய A/L சித்திபெற்ற மாணவர்களும் பெற்றோரும் 27.12.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு 182, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கிற்கு வருகை தரவும்.*

தொடர்புகளுக்கு:
பேராசிரியர் இரா.சிவசந்திரன் இணைப்பாளர்
ஐ.ஐ.ரி. யாழ். கிளை (அலுவலகம்),
182, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:021-2221111, 0777 266075

(C-4041)


# இந்தோனேசியாவிலுள்ள...

கடந்த இரண்டரை மாதகாலமாக வாழ்வாதாரத்திற்கு அவசியமான எந்தவித மருத்துவ வசதிகளோ அல்லது போசாக்கு உணவு வசதிகளோ அற்ற நிலையில் 254 இலங்கை தமிழ் அகதிகளும் அல்லற்படுகின்ற வேளையில் இச்சம்பவம் அவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது.

தனக்கு தீவிர மருத்துவ சிகிச்சை வேண்டுமென ஐ.ஓ.எம். எனப்படுகின்ற தொண்டு நிறுவனத்திடம் எவ்வளவோ பணிவாக வேண்டியும் மருத்துவமனை செல்ல அனுமதி மறுக்கப்பட்டு மருத்துவ தேர்ச்சியற்ற சாதாரண பணியாளர்களால் அந்நிறுவனத்தின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்ட மருந்தினை உட்கொண்டு மிகவும் சோர்வடைந்த நிலையில் காணப்பட்டார்.

மீண்டும் மாலையில் அவரின் நிலை மிகவும் மோசமடைய அனைத்து அகதிகளும் சேர்ந்து கடற்படையிடமும் ஐ.ஓ.எம். பணியாளர்களிடமும் இரண்டு மணி நேரமாக எவ்வளவோ மன்றாடி கேட்ட பின்பு சாதாரண எந்தவித அவசர சிகிச்சை அளிக்கக் கூடிய வசதிகள் எதுவும் அற்ற மகிழுந்து ஒன்றில் மீண்டும் ஐ.ஓ.எம்.பணிமனைக்கே கொண்டு செல்லப்பட்டார்.

சுயநினைவை இழந்திருந்த அவரையும் துணையாக சென்றவரையும் கப்பலில் இருந்து இறங்கி வந்ததால் மட்டுமே நோயாளிக்கு மருத்துவ வசதி செய்து தரப்படும் என உறுதியாக கூறி உள்ளனர்.

இங்கே தாமதிப்பது நோயாளியின் உடல் நிலைக்கு சிறந்த தல்ல என விளக்கி கூறியும் அங்கிருந்து எவரும் எம் கருத்திற்கு செவியாக்கவில்லை.

கப்பலில் இருந்து இறங்க மறுத்த காரணத்திற்காக உயிருக்கு போராடிக் கொண்டிருந்தவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லாமல் மீண்டும் கப்பலுக்கே கொண்டு வந்து அவரின் உயிர் போராட்டத்தை வேடிக்கை பார்த்து தாமதமாக வழங்கப்பட்ட மருத்துவ சிகிச்சை காரணமாக அவர் இறந்து விட்டார்.

இவரின் நிலையிலேயே கப்பலில் உள்ள அனைவரும் உரிய மருத்துவ சிகிச்சைகளோ இதர அடிப்படை வசதிகளே இன்றி அல்லல் படுகின்றனர் செய்தி நிறுவனங்கள், ஐ.ஓ.எம். தவிர்ந்த பிற தொண்டு நிறுவனங்களின் வருகைக்கு அனுமதி மறுத்திருப்பது மனித உரிமை மீறலாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


## அமிர்தம் நெல்லிரசம்

அமிர்தம் நெல்லிரசம் எட்டு வெற்றுப் போத்தல்களை உங்களது வாடிக்கைக் கடையில் கொடுத்து ஒரு நெல்லிரசப் போத்தலை அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளவும்.

மில்க்வைற்
த.பெ.இல 77,யாழ்ப்பாணம்.

(129)

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### ஒன்றுகூடல்

அன்புடையீர்,

பாண் விலை சம்பந்தமாக அனைத்து அங்கத்தவர்களையும் 27.12.2009 அன்று (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு சங்கத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு :- குறித்த் நேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும் என்பதனையும் அனைவரையும் கட்டாயம் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நன்றி
த.தவறஞ்சன்
செயலாளர்.

(C-4042)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093 - E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way**
**French Classes**

சர்வதேச மொழியான French மொழி யாழ்ப்பாணத்தில் French Embassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது.
எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்தி கொள்ளலாம்.
மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், மொழி பயில ஆர்வம் உள்ள எவரும் கற்கலாம்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம். (4183)

## வைத்திய சேவை

தினமும் மாலை 3.00 மணி தொடக்கம் இரவு 7.00மணி வரை யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்களினால் சிகிச்சையும், ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

இடம்:-
THE MEDILAND
த மெடிலான்ட்
(பாமஸி, கிளினிக்)
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

(C-4037)

# இன்று ஒரு தகவல்

## சிறப்பாகச் சிந்தியுங்கள்

ஒருத்தன் கற்பனையிலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தான். ஒருநாள் மரத்தடியில் உட்கார்ந்திருந்த அவனுக்குப் பசியெடுக்க ஆரம்பித்தது.

உடனே கற்பனையிலேயே சாப்பிட ஆரம்பித்தான். அதாவது எதிரில் இலைபோட்டு சாப்பாடு போட்டிருப்பதாகவும்... அதை இவன் சாப்பிடுவதாகவும் நினைத்துக் கொண்டு... கையை மட்டும் வாய்க்கும்... தரைக்குமாக அப்படியும் இப்படியும் கொண்டு போய் பாவனை பண்ணிக் கொண்டிருந்தான்.

தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு இவன் ஏதோ விருந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றும். அந்த வழியாக ஒரு சந்நியாசி வந்து கொண்டிருந்தார். இவனைப் பர்த்தார்.

"என்ன இவன் இப்படிச் செய்து கொண்டிருக்கிறானே..." என்று நினைத்தார். சிறிது நேரம் அவனையே உற்றுப் பார்த்தார்.

இவரைப் பார்த்ததும் அவன் இன்னும் சுவாரஸ்யமாக சாப்பிட ஆரம்பித் தான்.

"அப்பப்பா... என்ன இது... இந்தக் குழம்பு இவ்வளவு காரமாக இருக்கிறதே... என்னுடைய நாக்கே எரிந்து விடும் போலிருக்கு.." என்று சொல்லிக் கொண்டே பக்கத்திலிருந்த ஒரு குவளையை எடுத்துத் தண்ணீர் குடிப்பது போல் பாவனை செய்தான்.

"அப்பாடா... இப்ப கொஞ்சம் பரவாயில்லை" என்று சொல்லிக் கொண்டே குவளையைக் கீழே வைப்பது போல் பாவனை செய்தான். சந்நியாசி பார்த்தார்.

"என்னப்பா... சாப்பாட்டில் காரம் அதிகமோ?" என்றார்.

"ஆமாம் சுவாமி... ஞாபக மறதியால் மிளகாயை அதிகமாக சேர்த்து விட்டேன்" என்றான்.

"சரி... சாப்பிடு" என்றார். அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை பொறுமையாக உட்கார்ந்திருந்தார்.

"அப்பாடா என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் தண்ணீரை எடுத்துக் குடித்தான்.எல்லாம் கற்பனையில் தான்.

அதன் பின் சந்நியாசி பேச ஆரம்பித்தார்.

"இதோ... பாரப்பா உன்னுடைய கற்பனையை நான் மெச்சுகிறேன். இருந்தாலும் உனது சாப்பாட்டில் ஒரு இனிப்பையும் வைத்திருக்கலாமே... ஏன் மிளகாயை அதிகமாகப் போட்டுக் கொண்டு அவஸ்தைப்படுகிறாய்?" என்றார்.

அவன் யோசிக்க ஆரம்பித்தான்

அதன்பின் இவர் சொன்னார்:

"இதோ பாரப்பா... இனிமேல் உன்னுடைய கற்பனையும் உயர்ந்ததாக இருக்கட்டும்" என்று உபதேசம் பண்ணி விட்டுப் போனார். எப்பொழுதும் உயர்வைப் பற்றியே சிந்திக்க வேண்டும். உயர்வு கிடைக்கவில்லை என்றால் கூட அப்படிச் சிந்திப்பதை நிறுத்தக்கூடாது என்கிறார் திருவள்ளுவர்.

ஊக்கமில்லாமல் உலகத்தில் வாழ்ந்து பிரயோசனமில்லை உயர்வாகவே சிந்தியுங்கள்...

அது உங்களை ஊக்கப்படுத்தும் – இது பெரியோர் வாக்கு இந்த உலகத்தில் கற்பனையிலேயே வாழும் சில கஞ்சர்களும் உண்டு. இரண்டு கஞ்சர்கள் இருந்தார்கள். அவர்களிருவரும் பக்கத்து பக்கத்து ஊர்களில் வசித்து வந்தனர்.

ஒரு கஞ்சன் தன் மகனைக் கூப்பிட்டான்.

"இதோ பாரப்பா... பக்கத்து ஊரில் எனது நண்பன் இருக்கிறான். அவனுக்குப் பொங்கல் பரிசு கொடுக்க வேண்டும். நான்கு ஆட்டுக்குட்டிகள் தருகிறேன். நீ கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருகிறாயா?" என்றான்.

"சரி" என்றான் மகன்.

"ஒரு பையைக் கையில் எடுத்துக் கொள்" என்றான்.

அவன் எடுத்துக் கொண்டான். இந்தா ஆட்டுக்குட்டி. ஒவ்வொன்றாக போடுகிறேன். பையில் பிடித்துக் கொள் என்று சொல்லிவிட்டு...

ஒன்று – இரண்டு – மூன்று – நான்கு... என்று எண்ணிக் கொண்டே வெறும் சைகையாலேயே ஆட்டுக்குட்டியைப் பிடித்துப் போடுவது போல் பாவனை செய்தான். அவனுடைய மகனும் அதை மிகவும் அக்கறையுடன் வாங்குவது போல் வாங்கிக் கொண்டு போனான்.

இவன் அங்கே போய்ச் சேர்ந்த நேரத்தில் அந்தக் கஞ்சன் அங்கு இல்லை. எங்கோ வெளியில் போயிருந்தான். அவனுடைய பிள்ளை வீட்டிலிருந்தான்.

இவன் அவனிடம், "இதோ பார்... எங்கப்பா உங்கப்பாவுக்கு ஆட்டுக்குட்டி பரிசாக கொடுத்திருக்கிறார்" என்று சொல்லி ஒவ்வொன்றாக எடுத்து அவனிடம் கொடுத்தான்.

அவனும் வாங்கிக் கொண்டு பதிலுக்கு,

"நானும் 10 எலுமிச்சம்பழம் தருகிறேன். எடுத்துக் கொண்டு போ" என்று சொல்லி கையால் ஒவ்வொன்றாக எடுத்துப் போடுவது போல் பாவனை செய்தான். அவனும் அதை வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

சிறிது நேரம் கழித்து, வெளியில் போயிருந்த தகப்பன் வந்தார்.

"அப்பா... உங்களுடைய நண்பர் அவருடைய மகன் மூலமாக 4 ஆட்டுக்குட்டிகள் கொடுத்து அனுப்பியிருந்தார். நானும் பதிலுக்கு 10 எலுமிச்சம்பழம் கொடுத்தனுப்பினேன்" என்றான்.

"எப்படிக் கொடுத்தாய்?" என்று கேட்டார் அப்பா.

"இப்படித்தான்!"என்று சொல்லி சைகையால் காட்டினான்.

இதைப்பார்த்ததும் தகப்பனுக்குப் பயங்கரக் கோபம் வந்து பளாரென்று பையனை அறைந்து விட்டான்.

"ஏனப்பா அடித்தாய்? 10 எலுமிச்சம் பழம் கொடுத்து விட்டேன் என்றா..." என்று கேட்டான்.

"அது கூடப் பரவாயில்லை. நீ காட்டுற சைகையைப் பார்த்தால்... ஆரஞ்சுப்பழம் அளவுக்கு அல்லவா இருக்கிறது. அவ்வளவு பெரிதாக ஏன் கொடுத்தாய்? அதுதான் எனக்குக் கோபம்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வலி கிழக்கு பிரதேச சபையின்
# உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வு இம்மாதம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு வலி கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கடந்த யூலை மாதம் 12 ஆம் திகதி நீர்வேலி மாட்டு வண்டில் சவாரிப்போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு வலி கிழக்கு பிரதேச சபை செயலாளர் கேட்டுக் கொள்ளுகின்றார்.

மாட்டு வண்டில் சவாரிப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர்களின் விபரம் வருமாறு,

**ஏ - பிரிவு**

க. தவராசா (பண்டத்தரிப்பு), சி. பவில்தாசன் (கொடிகாமம்), க. சிவஞானம் (அளவெட்டி).

**பி - பிரிவு**

யோ. செந்தில் குமரன் (சங்கரத்தை), ம. மனோஜா (புத்தூர் வடக்கு), சி. அசோக்குமார் (புன்னாலைக்கட்டுவன்).

**சி - பிரிவு**

க. முருகன் (மாதகல்), கி. கமலராஜ் (வட்டுக்கோட்டை), பா. ஐங்கரன் (அளவெட்டி).

**டி – பிரிவு**

கி. இலக்கியன் (கல்வியங்காடு), சி. சதுஜன் (அராலி மேற்கு), ந. ரவீந்திரன் (புத்தூர் கிழக்கு).

(ஓ)

# வடபகுதி அபிவிருத்திப் பணிக்கு சீனா உபகரணங்கள் கையளிப்பு

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடபகுதியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் சீனாவிலிருந்து தருவிக்கப்பட்ட இயந்திரங்களை சீன தூதுவர் யங் ஷியூபிங் நேற்று முன்தினம் கையளித்தார்.

வடக்கின் அபிவிருத்தி மீள்குடியேற்றம் என்பவற்றுக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவிடம் இவை கையளிக்கப்பட்டன.

2352 மில்லியன் ரூபா செலவில் தருவிக்கப்பட்டுள்ள மேற்படி இயந்திராதிகள் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் கரண்ணகொடவிடம் கையளிக்கப்பட்டன.

46 பெக்கோ லோடர்கள், 04 கார்கோ டிரக்குடன் கூடிய லோடிங் கிரேன்கள், 12 பாம் டிராக்டர்கள், 09 பிடு மென்ட் ஸ்பிரேயர்ஸ், 01 டெகாடிங் பிளாண்ட், 02 சிப்சீலர், 09 பிடுமின் பௌசர்கள் (சூடாக்கும் வசதியுடன்) என்பன சீனாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# சிந்தனைக் கருத்தரங்கு

(கொழும்பு)

கொழும்பு அகில இலங்கை காந்திசேவா சங்கம் நடத்தும் காந்திய சிந்தனைக் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்திற்கு அருகாமையில் உள்ள மண்படத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத் துணைத் தலைவர் ஆ.வடிவேலு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் உலகமயமாக்கல் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சர்வோதய கோட்பாடுகளும், தீர்வுகளும் மற்றும் சத்திய வாழ்வு எனும் தலைப்புகளில் கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-9)

# ஓய்வூதியர்களுக்கு சலுகைக்கட்டணத்தில் சுற்றுலாப் பயணத் திட்டம்

ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரஜைகளுக்கு விசேட சலுகைக் கட்டணத்தில் சுற்றுலா பயணத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரஜைகள் சலுகைக் கட்டணத்தைச் செலுத்தி யாழ்ப்பாணம் செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்த எண்ணியுள்ளதாக சபையின் பிரதமர் நிறைவேற்று அதிகாரி என்.கே. ஏ.டபிள்யூ குணவர்த்தன தெரிவித்தார்.

ஓய்வூதியத் திணைக்களத்தினூடாக இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரஜைகளின் குடும்ப அங்கத்தவர்களும் வருடத்திற்கு ஒருமுறை சலுகைக் கட்டணத்தைச் செலுத்தி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ள முடியும் என அவர் கூறினார்.

இத்திட்டத்தின்கீழ் குழுக்களாக விண்ணப்பிப்போருக்கு பஸ் வண்டிகளை வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார். (6)

# இராசி பலன்

25-12-2009
(மார்கழி 10 வெள்ளிக்கிழமை)
அட்டமி முற்பகல் 7.47 மணிவரை
உத்தரட்டாதி முற்பகல் 10.27 மணிவரை
இராகுகாலம் 10.56-12.26 மணிவரை
சுபநேரம் 6.26-7.56 மணிவரை
நத்தார் பண்டிகை

| | |
|---|---|
| மேடம் | காரிய தாமதம், உணர்ச்சி வசப்படல், பிரயாணம், உறவினர் சந்திப்பு. |
| இடபம் | பொருள் சேர்க்கை, தடைப்பட்ட காரியம் கைகூடும், தெய்வ தரிசனம், மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | உற்சாகம், இனிய செய்தி, நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம். |
| கடகம் | ஆன்றோர் சந்திப்பு, சுய முயற்சி, தெய்வ சிந்தை, வீண்பயம். |
| சிங்கம் | எதிர்பாராத அச்சம், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம், கௌரவக்குறைவு. |
| கன்னி | தெய்வ தரிசனம், திடீர்பயணம், அபூர்வ சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| துலாம் | நோய் குணமடைதல், மனமகிழ்ச்சி, தெய்வ தரிசனம், விருந்துபசாரம். |
| விருச்சிகம் | வியாபார விருத்தி, காரிய இடையூறு, தனவிரயம், தாழ்ந்த சுபாவம். |
| தனுசு | கல்வியில் ஆர்வம், தாய்வழி உறவு, அதிக பிரயாசை, உஷ்ண வியாதி. |
| மகரம் | சகோதரர் உதவி, தெய்வ தரிசனம், போசனசுகம், எடுத்த காரியம் கைகூடும். |
| கும்பம் | விவாதம், தொழில் நன்மை, தனவிரயம், அமைதிக்குறைவு. |
| மீனம் | தெய்வ தரிசனம், நல்ல முயற்சி, உறவினர் வருகை, போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 260 | 280 | 300 |
| தக்காளி | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 90 | 80 |
| கரட் | 100 | 120 | 80 |
| பூசணி | 60 | 70 | 40 |
| புடோல் | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 110 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 80 |
| பாகற்காய் | 90 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 40 |
| கரணைக்கிழங்கு | 40 | 50 | 40 |
| பயிற்றங்காய் | 110 | 140 | 120 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | -- | -- | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 90 | 100 | 120 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | -- |
| கீரை – 1 பிடி | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 100 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 35 |



"முத்துக்களின் சமுத்திரம்" ஆங்கில கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அருட்தந்தை ஞானப்பிரகாசம் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மற்றும் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் உரையாற்றுவதையும், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நூலை வெளியிட்டு வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

## அளவெட்டி நாகேஸ்வரத்தில் சுவர்க்கவாயில் ஏகாதசி விழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் சுவாக்கவாயில் ஏகாதசிப் பெருவிழா எதிர்வரும் 28 ஆம்திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

விழாவில் காலை 6 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனமும் தொடர்ந்து 8 மணிக்கு அபிஷேகமும் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் இடம்பெற்று 11 மணிக்கு எம்பெருமான் தேரில் எழுந்தருளி வீதிவலம் வருவார்.

மாலை 6 மணிக்கு சாயங்காலப் பூஜையைத் தொடர்ந்து விசேட கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மறுநாள் செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் நடைபெறவுள்ள அர்த்தஜாமப் பூஜையைத் தொடர்ந்து அதிகாலை 2 மணிக்கு 1008 சங்காபிஷேகமும், 4 மணிக்கு வசந்த மண்டபப்பூஜையும், 5 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பரிசில் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியில் தபால் ஹப்பன் கணக்கினை வைத்திருக்கும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், தேசிய சேமிப்பு வங்கியின் வடமாகாண அஞ்சல் வங்கி கிளையினால் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைவாக ஹப்பன் கணக்கில் 01.10.2009 அன்று கணக்கு மீதி ரூபா ஆயிரம் அல்லது அதற்கு மேல் உடைய புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இம்மாதம் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்பதாக முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு தேசிய சேமிப்பு வங்கியின் அஞ்சல் கிளை முகாமையாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பாடசாலைகளில் தரம் 9 இற்கு தமிழ் மொழியும், தமிழ் இலக்கிய மும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்வி சீர்திருத்தச் செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் (சனி, ஞாயிறு) காலை 8.00 தொடக்கம் பி.ப.4.30 மணிவரை வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் பங்கு பற்றும் ஆசிரியர்கள் புதிய பாடப்புத்தகங்களை பாடசாலைகளில் பொற்றுக்கொண்டு உரிய நேரத்திற்கு சமூகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-6-29)

## ஒளிவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நெல்லியடி நாற்சதுர சுவிசேஷ சபையினரின் ஒளிவிழா நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணிவரை நடைபெறும் என வண பிதா தேவபாலன் அறிவித்துள்ளார். (ஓ-6-29)

## கணிதபாட ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிமனையின் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்துப் பாடசாலைகளினதும் கணித பாட ஆசிரியர்கள் தவறாது சமுகமளிக்குமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 5 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நூலக சமூகத்தினரின் ஏற்பாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 5ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும் அதனையொத்த கண்காட்சியும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

எனவே ஆர்வலர்கள் அனைவரும் நிகழ்வில் கலந்துகொள்வதுடன் கண்காட்சியினையும் பார்வையிடுமாறு யாழ்.பல்கலைக்கழக நூலக சமூகத்தினர் கேட்டுள்ளனர். (ஓ-9)




## ஆய்வரங்கும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, மல்லாகம் லயன்ஸ் கழக ஏற்பாட்டில் " சுனாமி பேரலையின் கோர நிகழ்வுகள்" மற்றும்" நிஷா சூறாவளி வெள்ளப் பேரழிவுகள்" சம்பந்தமான ஆய்வரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு துர்க்காபுரம் சிற்பாலயம் கலைக்கூடத்தில் நடைபெறவுள்ளது.

வரலாற்றுப் பதிவான சுனாமிச் சிற்பத்தின் முன்பாக பாதிக்கப்பட்டவர்களது வழிபாட்டுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் தொடர்ந்து சுனாமி சிற்பங்களின் கண்காட்சி யும் ஆனந்தி பழமலர் சோலையின் உற்பத்திகளான பயன்தரு மரங்கள், பலவிதமான பழ -மலர்க் கன்றுகளின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளது. (6-9)

## காணி மாவட்டப் பதிவக பணிகள் இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக காணி மாவட்டப் பதிவகத்தில் வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் விவாக, பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பங்களும் காணி உறுதிப் பிரதிக்கான விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளும் பணிகள் இடம்பெறமாட்டாது என யாழ். காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் ப.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஜனவரிமாதம் முதலாம் திகதியிலிருந்து சகல பணிகளும் வழமைபோல இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6-9)

## கணபதி படிப்பகத்தின் 42ஆவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி படிப்பகத்தின் 42 ஆவது ஆண்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1.30 மணிக்கு வல்வை மகளிர் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் அ.மனோகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பதில் செயலாளர் திருமதி தி.சாந்தினி, கௌரவ விருந்தினராக வல்வை மகளிர் மகா வித்தியாலய அதிபர் திருமதி கு.நகுலாம்பிகை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள், பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (6)

## புதிய கட்டடங்களின் திறப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நெகோட் திட்டத்தின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வைத்திய நிபுணர்களுக்கான விடுதி மற்றும் பொது மருந்துக் களஞ்சியம் என்பன எதிர்வரும் 38 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, நெக்கோட் திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.இ.ஞானஜோதி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக நெக்கோட் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர். சிவரூபன், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன், யாழ்ப்பாணம் கட்டட திணைக்கள பிரதம பொறியியலாளர் க.குகநேசன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)


## அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினால் யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட கணனி வன்பொருள் திருத்தற் பயிற்சி (அணி1, அணி 2) சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றுக்கான இறுதிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளது.

பங்குபற்றிய மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகமளித்து அனுமதி அட்டையினைப் பெற்றுக்கொள்ளுமாறு போதனாசிரியர் அறிவித்துள்ளார். (6-9)



சந்நிதியான் ஆச்சிரம
சைவகலை பண்பாட்டுப் பேரவை
நடாத்தும்

வருடாந்த திருவாசக விழா 2010

காலம்: 25.12.2009 வெள்ளிக்கிழமை காலை 10 மணி
இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
சிறப்புச் சொற்பொழிவு : திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்
வாராந்த வெள்ளிநிகழ்வு : ஞானச்சுடர் 144 ஆவது மாத வெளியீடு
வெளியீட்டுரை : திரு.சோ.பரமநாதன் G.S அவர்கள் (குப்பிளான்)
மதிப்பீட்டுரை : திரு.ஆ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர் –சாவகச்சேரி)

ஶ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும் திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

குறிப்பு :- 01.01.2010 வெள்ளிக்கிழமை புதுவருட தினத்தன்று எமது வாராந்த நிகழ்வு வரிசையில் அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்களது நினைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தால் உருவாக்கப்பட்ட வைத்திய சேவைக்கும் முன்பள்ளிக்குமாகிய புதிய கட்டடம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு

சந்நிதியான்
ஆச்சிரமம்

(C-4035)

# சரத்பொன்சேகாவிற்கான பாதுகாப்பில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடாது

## தேர்தல் ஆணையாளர்



(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன் சேகாவிற்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றங் களை ஏற்படுத்தக்கூடாது என தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சரத்பொன்சேகாவிற்கு வழங்கப்படடுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் வாகனங்கள் அகற்றப்படக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத்பொன்சேகாவின் தேர்தல் பிரச்சாரக் காரியாலயமொன்றில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவரது ஊடகப் பேச்சாளர் அனுரகுமார திஸாநாயக்க இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு தொடர்ந்தும் பாதுகாப்பு தேவைப்படுவதாக தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (6-9)

# சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பில் முறையிட புதிய தொலைபேசி எண்

(கொழும்பு)

சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்க 24 மணி நேரமும் இலவசமாகச் செயற்படும் புதிய தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதர்க சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் சுமேதா ஜீ. ஜயசிங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தகவல் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையின் எப்பாகத்திலாவது சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் நடைபெற்றால் அது தொடர்பில் எவரும் 1929 என்று இலக்கத்துக்கு இலவச இணைப்பை ஏற்படுத்தி முறைப்பாடு செய்யலாம்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதிக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் இந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமக்குத் தேவையான சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றார். (6-9)

# மகிந்த சிந்தனையின் 2ஆம் கட்ட கொள்கைப் பிரகடனம் விரைவில் வெளியிடப்படும்

## அமைச்சர் யாப்பா

(கொழும்பு)

மஹிந்த சிந்தனையின் இரண்டாம் கொள்கைப் பிரடகடனம் விரைவில் வெளியிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வாரமளவில் குறித்த சிந்தனைத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் வெளியிடப்படும் என ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதனையும் உள்ளடக்கிய பாரிய அபிவிருத்தித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்வடிகாலமைப்பு, பெருந்தெருக்கள், விவசாயம் உள்ளிட்ட பல துறைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

மஹிந்த சிந்தனையின் இரண்டாம் கட்டத்தின் அடிப்படையில் நாட்டின் சகல மக்களுக்கும் மின்சார வசதி வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-9)

# முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகாவுக்கு ஆதரவு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சிறில் ரணதுங்க எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார்.

மாவனல்லையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு தாம் ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சரத்பொன்சேகாவின் வெற்றிக்கு பூரண ஆதரவளிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## வவுனியா -கொழும்பு

# தபால் ரயில் தடம்புரண்டது

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து கொழும்பு வந்த இரவு தபால் ரயில் கல்கமுவ பிரதேசத்தில் தடம்புரண்டதில் 29 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் மூன்று பெட்டிகள் தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை1.45 அளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்தோர் கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்த நால்வர் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக கொழும்பு -வவுனியா ரயில் தடத்தில் கல்கமுவ வரை மட்டுமே தற்போது சேவைகள் நடைபெறுவதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (6)


## யாழ்ப்பாணம், மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக் கடைகள், என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# மீள் கேள்வி அறிவித்தல் -2010

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் *01.01.2010* ஆம் திகதி முதல் *31.12.2010*ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி நீங்கலாக) — ரூ. 400.00
கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி — 29.12.2009 முற்பகல் 10.00மணி வரை
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் — 29.12.2009 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் — 29.12.2009 பிற்பகல் 2.00 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 29.12.2009 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமூகமளிக்கலாம்.

குறிப்பு :- 04.11.2009 ஆம் திகதி வெளியான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
23.12.2009

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

| இல | சந்தை/கடையின் பெயர் | கடை இல | பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும் ,3% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | பண்ணை மீன் சந்தை | | 10000 | 3325000 |
| 02 | பெரியகடை மரக்கறிச் சந்தை | | 10000 | 1425000 |
| 03 | புங்கன்குளம் சந்தை | | 2000 | 9500 |
| 04 | நாவாந்துறை சந்தை | | 10000 | 451250 |
| 05 | அரியாலை சந்தை | | 1000 | 99750 |
| | | | | |
| 01 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 4 | 5000 | 109250 |
| 02 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 2 | 5000 | 133000 |
| 03 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | 1 | 5000 | 99750 |
| 04 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 2 | 5000 | 104500 |
| 05 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 4 | 5000 | 66500 |
| 06 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 5 | 5000 | 66500 |
| 07 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 6 | 5000 | 66500 |
| 08 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 7 | 5000 | 66500 |
| 09 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 8 | 5000 | 66500 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 9 | 5000 | 66500 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 10 | 5000 | 9500 |
| 12 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | 11 | 2000 | 9500 |
| 13 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | 12 | 2000 | 9500 |
| 14 | குருநகர் மாட்டிறைச்சி | 7 | 7000 | 95000 |
| 15 | முஸ்லீம் கல்லூரி ஆட்டிறைச்சி | 2 | 5000 | 23750 |

(C-4034)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 7 விதி எண் : 3

### உடலமைப்பு

பிறந்த எண் 7 விதி எண் 3 ஆகக் கொண்டு பிறந்தவர் கேது, குருவின் ஆதிக்கத்திற்குட்பட்டவராவர். இவர்கள் சற்று உயரமானவர்களாகவும் பிறரைக் கவரும் முகத்தோற்றம் கொண்டவர்களாகவும் இருப்பர். ஒரு சமயம் ஆடம்பரமாகவும் மறுசமயம் எளிமையாகவும் காட்சி அளிப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் பேச்சு தனித்தன்மை வாய்ந்ததாக பிறர் மனத்தில் பதியும் வண்ணம் தெளிவாகவும் அதே நேரத்தில் சுருக்கமாகவும் அமையும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டார்கள்.

இவர்கள் நீதி, நேர்மைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பர். பிறர் தவறு செய்தாலும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். வன்மையாகக் கண்டிக்கும் துணிச்சல் மிக்கவர்கள். கள்ளம் கபடமறியாதவர்கள்.

இவர்கள் முன்கோபியாக இருப்பர். தன்னைவிடப் பலசாலியாக இருந்தால் கூட அவர்களைக் கண்டு கொஞ்சமும் அஞ்சமாட்டார்கள். சமயம் நேரும்போது மோதுவர்.

இவர்கள் புதுமை விரும்பிகளாக இருந்தாலும் பழமைக்குப் மதிப்பளிப்பவர்களாகவும் அதிலும் உயர்வை மதித்துப் பின்பற்றுபவர்களாகவும் இருப்பர். தன் இனத்துக்காகவும் நாட்டுக்காகவும் உழைக்கக் கூடியவர்கள். இவர்கள் வீண் விவகாரங்களில் தலையிடமாட்டார்கள்.

எப்போதும் எச்சரிக்கையுடன் இருப்பர். பிறரால் ஏமாற்றப்படவோ வஞ்சிக்கப்படவோ இடமளிக்க மாட்டார்கள். தனக்கு நேரப் போவதை முன்கூட்டியே ஊகித்தறியும் ஆற்றல் பெற்றவர்.

தனக்கு ஏற்படும் தோல்விகளையும் வேதனைகளையும் வெளியிடமாட்டார்கள். இவர்கள் அனைவரிடமும் பழக மாட்டார்கள். குறிப்பிட்ட சிலர்தான் இவரது நண்பர்களாக இருப்பர்.

நண்பர்களுக்காக எதையும் செய்யத் தயங்க மாட்டார்கள். இவர்களிடம் தயவு தாட்சண்யம், ஈவு, இரக்க குணம் இருக்கும். பிறர் கஷ்டப்பட மனம் பொறுக்காது உதவுவர்.

இவ்வளவு இருந்தும் இவர்களுக்கு ஒரு சிறு பிரச்சினை அல்லது வேதனை வந்துவிட்டால் போதும், மனக் குழப்பத்துக்கு ஆளாவர். அது தீரும்வரை தூங்கக்கூட மாட்டார்கள்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களின் குடும்ப வாழ்க்கை நல்ல முறையில் அமைந்தாலும் இவர்களுக்கும் உடன்பிறந்தவர்களுக்கும் ஒத்து வருவது கடினம். கருத்து வேறுபாட்டால் பகை கொண்டிருக்க நேரும்.

இவர்கள் பெண்களிடம் அதிகப் பழக்கம் வைத்துக் கொள்வர். அதனால் பல நேரங்களில் பல தொல்லைகளுக்கு ஆளாக நேருவதோடு குடும்ப அமைதிக்கும் பங்கம் ஏற்படக் கூடும். குடும்பத்தில் ஏற்படும் சிறு பிரச்சினைகளையும் பெரிதாக எண்ணி வேதனைப்படுவர்.

### தொழிலும், வருமானமும்

கலையார்வமிக்க இவர்கள் எழுத்து, காவியம் புனைதல், சங்கீதம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவர். கற்பனைத் திறன் மிக்கவர்கள். இவை தவிர கல்வி கற்றவராகவும் அறிவியல், மருத்துவம், கணிதம் மற்றும் ஜோதிட சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருக்கக்கூடும்.

மேற்குறிப்பிட்ட துறைகளில் பணிபுரிபவர்களாகவும் இருப்பர். இவர்கள் பெருமளவு பொருள் சம்பாதிக்கக் கூடியவர்களாக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண மிகுதிப்பட்டாலும் வாய்வு சம்பந்தப்பட்டதுமான நோய்களும் வரும். நெஞ்சு வலி, மார்பு சம்பந்த நோய் உண்டாகும். நரம்புத் தளர்ச்சிக்கு உள்ளாகக் கூடும். சித்தப்பிரமை ஏற்படவும் வாய்ப்புண்டு.

### சாதக பாதக எண்களும் திக்தியும்

இவர்கள் புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 5 மற்றும் அது தொடர்பிலான எண்களில் யோகமான பலன் தருவன ஒன்றில் பெயர் அமைத்துக் கொள்ளலாம். குரு ஆதிக்கத்திற்குட்பட்ட 3 இல் யோகப்பலன் தரும் எண்களுக்கும் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்குக் கூட இதே 5,3 தொடர்பிலான யோகமான எண்களில் பெயர் அமைத்துக் கொள்ள அதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு சந்திரன், புதன், குரு ஆதிக்கத்திற்குட்பட்ட 2,5, 3 ஆகிய தொடர்புடைய எண்களும் திகதிகளும் யோகமானவை.

ஆனால் செவ்வாய், சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற 9,6 ஆம் அது தொடர்புடைய எண்களும் திக்தியும் யோகமற்றவை.

## உடல் எண் : 7 விதி எண் : 4

### உடலமைப்பு

பிறந்த எண் 7 விதி எண் 4 ஆகக் கொண்டவர்கள் சாயா கிரகங்களான கேது, ராகு ஆகிய இருவரின் ஆதிக்கத்திற்குபட்டவர்கள். இந்த எண்ணுடையோர் சற்று உயரமானவர்களாக இருப்பர். இவர்கள் எப்போதும் தூய்மையான ஆடையுடன் கவர்ச்சியாகக் காட்சியளிப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் நல்லது, கெட்டது எதையும் ஊகித்தறியும் ஆற்றல் பெற்றவர்கள். தனக்கு வருங்காலத்தில் நடக்கப் போகும் பலன்களைக்கூட முன்கூட்டியே அறிந்து கொள்வர்.

அது மட்டுமன்றி முன்பின் அறிமுகமில்லாத ஒருவரைப் பார்த்தவுடனேயே அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அவர்களை சரியான ஈமுறையில் மதிப்பிட்டு விடுவர். எதையும் நிதானமாகவும் பிறர் பாராட்டும்படியும் செய்யக்கூடியவர்கள்.

அதனால் இவர்கள் அனைவரிடமும் பழக்கம் வைத்துக் கொள்ளமாட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரைத்தான் நண்பர்களாகக் கொண்டிருப்பர்.

இவர்களைப் பிறரால் புரிந்துகொள்ள முடியாது. ஒருசமயம் கலகலப்பாக பிறரிடம் பேசி மகிழ்வர். மறுசமயம் தனிமையில் எதையோ பறிகொடுத்ததைப் போல இருப்பர். அந்த அளவு இவர்கள் மனக் குழப்பத்துக்கு ஆளாகக் கூடியவர்களாக இருப்பர்.

இவர்கள் ஆழ்ந்து யோசித்துத்தான் எதையும் செய்வர். தனக்குப் பிடிக்காததைப் பிறர் வற்புறுத்தினாலும் செய்ய மாட்டார்கள். அதைப் போன்று தமக்குப் பிடிக்காத ஒன்றை யார் செய்தாலும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

இவர்கள் பிறரை ஏமாற்றமாட்டார்கள். பிறர் தம்மை ஏமாற்றவும் விடமாட்டார்கள். ஒரு சில நேரங்களில் ஆத்திரத்தில் எதையாவதொன்றைச் செய்து விட்டு அதனால் பெருமளவு அவதிப்படுவர். இவர்கள் சாப்பிடுவதில் வல்லவர்களாக இருப்பர்.

கடவுள் நம்பிக்கை மிகக் கொண்டவர்கள். ஆன்மீகத் துறையில் அதிக நாட்டமும் போதிக்க வல்லவர்களாகவும் இருப்பர்.

ஒருசமயம் இல்லற இன்பமே சிறந்தது என்பர். மறுசமயம் அதை வெறுத்து தனிமையை நாடுவர்.

### குடும்ப வாழ்க்கை

இப்படிப்பட்ட மாறுபட்ட கருத்துடைய இவர்களுக்கு வாழ்க்கைத்துணை நல்லவராக இருந்தாலும் குடும்பத்தில் அதிக நாட்டம் கொள்வதில்லை. சிறிது காலத்திலேயே இல்லற இன்பத்தை வெறுத்து விடுவர்.

இவர்களுக்கு குடும்ப வாழ்க்கை விரக்தியானதாக இருக்கும்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலைத் தொடர்பில் நாட்டமும் இசை, சங்கீதம் நாட்டியத்துறையில் ஈடுபாடும் கொண்டவர்களக இருப்பர். எழுத்து, பேச்சில் வல்லவர்கள்.

கல்வியிலும் மருத்துவம், பொறியியல், ஜோதிடம் போன்ற தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவராயும் இருப்பர். நூல் வெளியிடுதல், விற்றல், அச்சகப் பொருட்கள், வண்டி வாகனங்கள் மற்றும் அழகு சாதனம், ஆடம்பரப் பொருட்களைத் தயாரித்தல், விற்றல் போன்ற துறைகளில் ஈடுபட்டிருக்கக்கூடும்.

இவை தவிர பொதுநலத் தொண்டில் ஈடுபடுவதன் மூலம் பொருள் சேர்க்கையும் பெற வாய்ப்புண்டு.

இவர்கள் எத்துறையில் ஈடுபட்டிருந்தாலும் அதிகம் பொருள் சம்பாதனை பெறுவர்.

### ஆரோக்கியநிலை

இவர்கள் அதிகமாகச் சாப்பிடக் கூடியவர்கள். அதனால் சீரணமண்டலத் தொடர்பிலான வயிற்று நோய் போன்றன உண்டாகலாம். கொழுப்பு மிகுதியாலும் உப்பு, சர்க்கரை மிகுதிப்பட்டாலும் கூட தொல்லை அனுபவிக்க நேரும். இவை தவிர இரத்தக் கொதிப்பு, வாத நோய், பல்வலி போன்றனவும் உண்டாகும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6 மற்றும் அது தொடர்புடைய யோகமான எண்களில் பெயர் அமைத்துக் கொள்வது சிறந்தது.

தம் நிறுவனங்களுக்குக்கூட 6 தொடர்புடைய எண்களில் பெயர் அமைத்துக் கொள்ள அதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு சுக்கிரன், சூரியன், சந்திரன் தொடர்பிலான 6,1,2 மற்றும் அவை தொடர்புடைய எண்களும் திகதியும் யோகமானவை.

ஆனால் செவ்வாய், சனி ஆதிக்கத்திற்குள் அடங்கிய 9,8 மற்றும் அது தொடர்புடைய எண்களும் திகதியும் சோதனையானவை. (தொடரும்)

# சரத் பொன்சேகாவே ஐ.நாவுக்கு தனது கூற்று தவறானதென அறிவிக்க வேண்டும்

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் கூற்றினால் எழுந்துள்ள நெருக்கடி தொடர்பில் அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டமைச்சு நாட்டுக்குப் பாதிப்பில்லாத வகையில் பதிலொன்றைத் தயாரித்து ஐ.நா.வுக்கு அனுப்புமென ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தனது கூற்று தவறானது என சரத் பொன்சேகாவே கடிதமொன்றை ஐ.நா.விற்கு அனுப்பினாலொழிய இந்நெருக்கடி ஏற்படுத்தும் பாதிப்பை தவிர்க்க முடியாது என தெரிவித்த அமைச்சர் எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதிக்குப்பின் இது தொடர்பிலான அனைத்து நெருக்கடிகளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே வந்து சேரும் என்றும் தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. விடமிருந்து இவ் விவகாரம் தொடர்பான மூன்று முக்கிய விடயங்கள் சம்பந்தமாக கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. இக் கேள்விகளுக்கு அரசாங்கம் பதிலளித்தாக வேண்டியுள்ளது. இவ் விவகாரமானது அரசியல் ரீதியாகவும் பெரும் பிரச்சினையை தோற்றுவித்துள்ளது.

சரத் பொன்சேகாவின் இவ் விவகாரம் தொடர்பாக ஜே.வி.பி.எம்.பி விஜித ஹேரத் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். இதன் மூலம் ஐ.நா. வைத்திருப்திப்படுத்த முடியாது.

சரத் பொன்சேகா அரசியல் இலாபத்திற்காகவே இவ்வாறான குற்றச்சாட்டை வெளியிட்டதாகவும் வடக்கு தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தே இவ்வாறு செய்ய நேர்ந்ததாகவும், தாம் குறிப்பிட்டுள்ளது போன்று ஒரு சம்பவம் நடக்கவில்லையென்றும் கடிதமொன்றை ஐ.நா.வுக்கு அனுப்ப வேண்டும்.

அவ்வாறு அனுப்பினால் இப் பிரச்சினை இலகுவாகும். இல்லாவிடில் இப் பிரச்சினை பூதாகாரமாகி பல நெருக்கடிகளை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தும். (ஓ-6)

# மீள்குடியேறும் மக்களுக்கு உதவுவதற்கு அனுமதிக்கவேண்டும்

## பிரதம நீதியரசரிடம் மன்னார் ஆயர் தெரிவிப்பு

(மன்னார்)

மீள்குடியேறும் மக்களுக்கு உதவுவதற்கு ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே அனுமதி வழங்கியுள்ளதால் எமது பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையினால் உதவ முடியாதுள்ளது.

எனவே அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசேப் பிரதம நீதியரசர் அசோகா டி.சில்வாவிடம் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா மன்னாருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்டார். அப்பொழுது இவர் மன்னார் மறை மாவட்ட மறை ஆயர் இராயப்பு யோசேப்பை மரியாதையின் நிமித்தம் ஆயரின் இல்லத்தில் சந்தித்த போதே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயர் பிரதம நீதியரசரிடம் தனது கருத்துக்களை மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பலர் மீள் குடியேற்றப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு பல தேவைகள் தற்பொழுது தேவைப்படுகின்றன.

ஆனால் ஓரிரு அரச சார்பற்ற அமைப்புகளுக்கு மட்டுமே அவர்களுக்கு உதவி செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. எமது கத்தோலிக்க திருச்சபையும் அம்மக்களுக்கு உதவி செய்ய அவர் கொண்டிருக்கின்ற போதும் எமக்கு உதவி செய்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.


அடுத்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படல் வேண்டும்.

அதுவும் குறைந்த செலவில் தற்காலிக கொட்டில் போல் அமையாது சுனாமியால் பாதிப்பு அடைந்த மக்களுக்கு அமைத்துக் கொடுத்த வீடுகள் போல் அமைத்துக் கொடுக்கப்படல் வேண்டும். (ஓ-6)

# விஜயநகர கலைப்பாணி

86

விஜயநகர காலத்திற் கோயில் வளாகங்களில் பல வகையான மண்டபங்கள் அமைக்கப்பெற்றன. அவை பல வரிசைகளில் அமைந்த தூண்களோடு விசாலமான கட்டடங்களாக அமைந் திருக்கும், அவற்றிலே கல்யாண மண்டபம் எல்லாவற்றுள்ளும் சிறப்புடையதாயிருக்கும். அது முற்காலங்களிலே காணப்படாதவொன்று, அதனை அமைக்கும் வழக்கம் விஜயநகர காலத்தில் ஏற்பட்ட ஒன்றாகும்.




ஸ்ரீரங்க பட்டணக் கோவில்

உயரமான அதிர்ஷ் டானத்தில் அமைந்திருக்கும் கல்யாண மண்டபத்தின் நடுவிலமைந்த பீடத்திலே, சுவாமியினதும் அம்மனதும் படி மங்களை அலங்காரக் கோலதத்துடன் வைத்து வருடந்தோறும் திருக்கல்யாண வைபவம் நடைபெறும்.

திருக்கல்யாண உற்சவம் விஜயநகர காலம் முதலாகத் தென்னிந்தியக் கோயில்களிலே பொதுவழக்காகி விட்டது, கல்யாண மண்டபம் பக்கச் சுவர்களின்றி அமைந்திருக்கும். அதன் கூரை தட்டையானது. மண்டபம் முழுவதும் கல்லினால் அமைந்திருக்கும். அதிலுள்ள தூண்களிற் காணப்படும் அற்புதக் கோலமான சிற்ப வேலைப் பாடுகளின் காரணமாகக் கல்யாண மண்டபம் ஓர் அலங்கார மண்டபம் போலக் காட்சியளிக்கும். கற்றூண்களிலே புராணக் கதைகளை ஆதாரமாகக் கொண்ட சிற்பங்களும் கடவுட் படிமங்களும் கல்லநயம் மிகுந்த கோலத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.

விஜயநகர கலைப்பாணியிலே தூண்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அவை அளவிற் பெரியவை ; மிகவும் உயரமானவை ; மிகுந்த சுற்றளவினைக் கொண்டவை; ஒவ் வொரு தூணும் தனிக் க்ல்லில் அமைந்தது. தூண்கள் கூட்டுத்தூண்கள் போலக் காட்சிய ளிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டிருக்கும். நடுவில் அமைந்த பிரதானமான தூணைச் சுற்றி



பேலூர் ஆலயக் கோபுரம்

வேறும் பல தூண்கள் அமைந்த கோலமாயிருக்கும்.

விஜயநகர கலைப்பாணியிலே தூண்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அவை பல நூற்றுக் கணக்கில் ஆலய வளாகத்திலே காணப்படும். நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், கல்யாண மண்டபம் முதலியவற்றிலே தூண்கள் வரிசை வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன.

அவை பலவிதமான கோலங்களில் அமைந்துள்ள கூட்டுத்தூண்களாகும். அவை சிற்ப வேலைப்பாடுகள் பொருந்திய அலங்காரத் தூண்களாகக் காணப்படுகின்றன. அவற்றிலே அளவிற் பெரிதான உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிலவற்றிலே கம்பீரமான தோற்றங் கொண்ட தாவிப்பாயும் போர்க் குதிரையின் வடிவம் அமைந்திருக்கின்றது. கடிவாளம் பூட்டிய குதிரையின் மேல் போர் வீரன் அமைந்திருக்கும் கோலத்திலே உருவம் மிகுந்த வனப்புடன் அமைக்கப்பட்டிருக்கும். ஸ்ரீரங்கத்தில், குதிரைக்களரி என்று சொல்லப்படும் சேஷாத்திரி மண்டபத்திலும் வேலூர் சலகண்டேஸ்வரர் கோயிலுங் காணப்படும் குதிரைவடிவங்கள் கலை வனப்பில் உன்னதக் கோலமானவை.

சிங்கத்தின் உருவம் அமைந்த தூண்கள் இன்னொரு வகையானவை. பல்லவர் கலைப் பாணியில் யாழித் தூண்கள் சிறப்பிடம் பெற்றிருந்தன. பிற்காலக் குடபோகங்களிலே தோன்றிய யாழித் தூண்கள் இராஜசிம்ம பாணியிலமைந்த கோயில்களிலே கட்டடத் தின் எல்லாப் பாகங்களிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. விஜயநகர காலத்தில் சில சமயங்களில் முற்கால வழமைப்படி தூணின் அடிப் பாகத்திலே யாழியின் உருவத்தை அமைத்தனர்.

மண்டபங்களில் அமைந்துள்ள கலப்புத் தூண்களிலே சாலையை நோக்கிய துணைத் தூணிலே, அதன் மேற்பாகத்திலே, வாயைப் பிளந்துகொண்டு முன்னங்கால்களைத் தூக்கி நிற்கும் நிலையிற் சிங்கத்தின் முழு வடிவம் அமைக்கப்பட்டது.

விஜயநகர கலைப்பாணியிலே பொதுவாக வகையான தூண்கள் காணப்பட்டன. சில சமயங்களில் ஓரிடத்திலேயே அம் மூன்று வகைகளைச் சேர்ந்த தூண்களும் அமைந்திருந்தன. ஒரு வகையிலுள்ளவற்றிலே பிரதானமான நடுத்தூணை ஒட்டிய வண்ணமாகப் பக்கங்களிலே பிரமாண்டமான சிற்பங்கள் செதுக்கப்பட்ட தூணமைப்புக்கள் காணப்படும்.

குதிரைத் தூண்கள், யாளித் தூண்கள், கடவுட் படிமங்கள், செதுக்கப்பட்ட தூண்கள் முதலியன அந்த வகைக்குரிய னவாகும். அவ் விதமான தூண்கள் ஆயிரங் கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், திருநடைமாளிகை போன்றவற்றிலே காணப்படும்.

இரண்டாவது வகையிலுள்ள தூண்கள் நடுவிலுள்ள பிரதானமான தூணைச்சுற்றி உருண்டை வடிவான மெலிந்த கம்பங்கள் அமைந்திருக்கும். அவை எல்லாம் ஒரே கல்லிலே செதுக்கப்பெற்றவை. கம்பங்கள் ஒவ்வொன்றையும் கைவிரல்களாற் தட்டும் பொழுது வெவ்வேறு விதமான இசையொலி கிளம்பும் வண்ணமாக மிக நுட்பமான முறையில் அவை அமைக்கப்பட்டிருக்கும். கர்நாடக சங்கீத முறையிலுள்ள சப்தஸ்வரங்கள் ஒலிக்கும் வண்ணமாக அவை உருவாக்கப்பட்டிருக்கும். விஜயநகரத்து விட்டல சுவாமி கோயில் மண்டபத்தூண்கள் அவற்றிலே பிரசித்தமானவை.

பேராசிரியர் சி.பத்மநாதன்


மூன்றாம் வகையிலுள்ள தூண்களின் அமைப்பு வேறுபட்டதாகும். கோயிலின் மாதிரியான சிறுற்றுருவங்கள் வனப்புமிகுந்த கோலத்திலே கீழிருந்து மேலாகப் பல வரிகளிலே செதுக்கப்பட்டிருக்கும். சில சமயங்களிற் சிகரம், கோபுரம் என்பவற்றிலுள்ள மாடங்களை ஒத்த நுண்ணிய உருவங்கள் தூண்களிலே அமைந்திருக்கும். விஜயநகர காலத்துத் தூண்களிலே மேற்பகுதியிற் புஷ்ப போதிகை சிறப்பம்சமாக விளங்கும். போதிகையானது வளைந்து நீளமாகத் தொங்குக் கோலத்தில் அமைந்திருக்கும். அதன் முகப்பிலே ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கிய மலர்கள் கீழ்நோக்கித் தொங்கும் கோலம் தெரியும்.

போதிகையின் முகப்பிலே கவிழ்த்த தாமரை மொட்டின் உருவம் அமைந்திருக்கும். தூண்களின் அமைப்பின் மூலம் விஜயநகர கலைப்பாணியிலுள்ள கட்டடங்களைச் சிரம மின்றி அடையாளங் காணலாம்.

### கர்நாடகத்துக் கோயில்கள்

விஜயநகர காலத்துக் கோயில்களைக் கர்நாடகத்துக் கோயில்கள் என்றும், ஆந்திர தேசத்துக் கோயில்கள் என்றும், தமிழகத்துக் கோயில்கள் என்றும் பிராந்திய அடிப்படையில் வகைசெய்யலாம். அம் மூன்று பிராந்தியங்களிலும் தனியான பண்புகளைக் கொண்ட கட்டடக் கலை மரபுகள் நெடுங் காலமாக வளர்ச்சி பெற்றிருந்தன. விஜயநகர காலத்திலே அவற்றுக்கிடையிலான பொதுப் பண்புகள் மேலும் வலுப்பெற்றன. திராவிட கலைப் பாணியின் செல்வாக்கு கர்நாடக மாநிலத் துக் கட்டடங்களிலும் கூடுதலான அளவில் ஏற்பட்டது.

விஜயநகர காலத்துக் கர்நாடகத்துக் கோயில்களில் சிருங்கேரியிலுள்ள சங்காராசாரியார் பீடத்திற்குச் சொந்தமான வித்தியாரண்யர் கோயிலும் விஜயநகரத்து விட்ல சுவாமி கோயில், ஹஸாரராம ஆலயம் என்பனவும் சாலச் சிறந்தனவென்று கலை வரலாற்று ஆசிரியர்களாற் போற்றப் படுகின்றன.



விருபாக்ஷா கோவில்

அவற்றுள் கேழடிப் பிராந்தியத்துக் கலைப் பாணியைப் பிரதிபலிக்கின்றதான வித்தியாரண்யர் கோயிலின் அதிர்ஷ்டானம் அற்புதக் கோலமானது என்பர். அதிலமைந்த சிற்ப வேலைப்பாடுகள் காண்போரைக் கவரும் வனப்பு மிக்க வசீகரத் தோற்றங் கொண்டவை. அக் கோயிலைப் பற்றி விவரங்கள் நூல்களிலே வெளிவராதுள்ளமையால் அவற்றைப் பற்றி எதனையும் கூறுமாறில்லை.

விஜயநகர கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் கோயில்களிலே விட்டலசுவாமி கோயில் சாலச் சிறந்ததாகக் கொள்ளப்படும்.

அதன் திருப்பணி வேலைகள் கிருஷ்ண தேவர்ராயரின் ஆட்சிக்காலத்தில் (1509 - 1529) ஆரம்பமாகி அச்சுதராயரின (1529-1542) காலம் வரை நடைபெற்றன. அதிலே கட்டட வேலைகள் முழுமையாக நிறைவேறவில்லை. விட்லசுவாமிகோயிலானது 500 அடி நீளமும் 310 அடி அகலமும் கொண்ட பிரகாரத் தினுள் அமைந்திருக்கின்றது. பிரகாரத்தின் வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் கோபுர வாசல்கள் அமைந்திருக்கின்றன. பிரகாரச் சுவர்களை ஒட்டி மூன்று வரிசைகளில் அமைந்த தூண்கள் பொருந்திய திருச்சுற்று மாளிகை அமைந்திருக்கின்றது.

கோயில் வளாகத்தில் 6 பிரதானமான கட்டடங்கள் அமைந்திருக்கின்றன. கர்ப்பக் கிரகத்து மூலவர் மகாவிஷ்ணுவின் ஒரு கோலமாகிய பாண்டுரங்கர் என்னும் விட்டல சுவாமியின் படிமமாகும். ஆலயம் மிகவும் நீளமானது; கிழக்கு நோக்கிய அமைப்பினைக் கொண்டது.


அது 230 அடி நீளமானது. அதன் உயரம் 25 அடியாகும். விமான சிகரம் செங்கல்லினால் அமைக்கப்பட்டிருத்தல் கூடுமென்றும் அது காலப் போக்கிலே சிதைவுற்று மறைந்துவிட்டது என்றுஞ் சிலர் கருதுவர். கர்ப்பக்கிரகம் 75 அடி நீளமான பக்கங்கள் கொண்ட சதுரமான அமைப்பாகும். அதனைச் சுற்றிச் சுற்றாலை அமைந்துள்ளது.

கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் ஆகிய மூன்று ஒரே வரிசையில் அமைந்துள்ளன. இவற்றில் முதல் இரண்டும் அடங்கிய பகுதி 135 அடிநீளமும் 67 அடி அகலமும் கொண்டுள்ளது. அதன் சுவர்களின் வெளிப்புறத்திலே தேவகோட்டங்களும், அரைத்தூண்களும் , அலங்கார விதானங்களும் நுட்பமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

அர்த்தமண்டபத்திலும் மகாமண்டபத்திலும் தூண்வரிசைகள் உள்ளன. அர்த்த மண்டபத்திற்கு 3 வாசல்கள் உள்ளன. கிழக்கு வாசல் மகாமண்டபத்தினூடாகச் செல்லும் வாசல், வடக்கிலும் தெற்கிலும் உள்ள வாசல்களை படிக்கட்டுகள் மூலம் அடைய வேண்டும். அவற்றுக்கு மேலே தூண்களோடு கூடிய சிறிய முக மண்டபங்கள் அமைந்துள்ளன.

சுவர்களற்றதான மகாமண்டபம் 100 அடி நீளமான பக்கங்களைக் கொண்டுள்ளது. அது குமுதப்படைகள் அமைந்த ஐந்தடி உயரமான அதிர்ஷ்டானத்தின் மேல் அமைந்துள்ளது.

மகாமண்டபத்தின் மூன்று பக்கங்களில் வாசல்கள் உள்ளன. வாசற்படிகள் வழியாக ஏறிச்சென்று அவற்றை அடையலாம். வாசற் படிகளின் முன்னால் அவற்றின் ஓரங்களிலே யானைகளின் உருவங்கள் கவர்ச்சி மிக்க கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மண்டபத்திலே உன்னதமான வேலைப்பாடுகளுடன் அமைந்த கலப்புத் தூண்கள் காணப்படுகின்றன.



சிற்பங்கள் அடங்கிய கோபுரம்

அவற்றிலே கம்பீரமான தோற்றங் கொண்ட போர்க் குதிரைகளின் வடிவங்களும் யாழிகளின் உருவங்களும் அலங்காரமான தோற்றத்துடன் அமைந்துள்ளன. (தொடரும்)

# நத்தார் தின சிறப்பு

## யாழ். ஆயரின் நத்தார் செய்தி



நத்தார் விழாவானது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து மானிட மீட்புக்காக குழந்தையாக பிறந்ததை நினைவு படுத்துகின்ற நாளாகும். இருளின் அந்தகாரத்திலும் மரணநிழலிலும் வாழும் மக்கள் ஒளியை காண்பார்கள் என இறைவாக்கினர் உரைத்தனர். எனவே இருள் அகற்றி உலகிற்கு ஒளி தரும் வார்த்தையாகி பாலகன் இயேசுவின் பிறப்பு விழா நல்லுள்ளம் கொண்ட அனைவர்க்கும் அமைதி அளிக்கும் விழாவாக உள்ளது.

30 வருட கொடிய போரின் பின் யுத்த தளபாடங்கள் ஓய்ந்து அமைதி நிலவும் இக் காலத்தில் நத்தார் பெருவிழாவை கொண்டாடுகின்றோம். துன்பியல் தரும் கொடிய போர் ஓய்ந்து அமைதி நிலவும் இத் தருணத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

போரின் பயனாக நடந்த பிரச்சனைகள் இன்னும் முழுதும் தீர்க்கப்படவில்லை. இடம் பெயர்ந்த மக்களின் அவலநிலை இன்னும் முடியவில்லை. அவர்கள் தம் இல்லங்களுக்கும் நிலபுலங்களுக்கும் திரும்பி நாளாந்த வாழ்வை மேற்கொள்ளும் போது தான் அவர்கள் நிம்மதி அடைவார்கள்.

நாளாந்தம் அசுரவேகத்தில் ஏறி வரும் விலைவாசிகளும் அதனால் ஏற்படும் சிரமங்களும் பரந்து நிற்கும் வறுமையும் வாழ்வதற்கு தகுந்த இல்லிட மற்ற நிலைமையும் வேலைவாய்ப்பு இன்றிய நிலையும் இன்று மக்களை வாட்டி நிற்கின்றன. இவற்றிற்கு நிரந்தர தீர்வு காண்பது அரசினதும் ஏனைய உதவி நிறுவனங்களினதும் கடமையாகும்.

எனவே இருளகற்றி ஒளியேற்ற பிறந்த பாலன் இயேசுவின் நத்தார் பெருவிழா துன்புறும் மக்களின் துயர்துடைத்து அனைத்து மக்களையும் சகோதரர்களாக ஏற்று வாழ அர்ப்பணிப்புடன் உழைப்போம். மீட்புக்காக மனிதனாய் பிறந்த ஆண்டவர் இயேவின் ஆசீரை அனைவர்க்கும் தெரிவித்து எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**பேரருட் திரு இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
யாழ் .ஆயர் ,



## நம்பிக்கை ஒளியை ஏற்றுவோம்

சத்திரத்திலும் இடமில்லை என்பவரது வரலாறு சரித்திரத்தில் நினைவு கூரப்படும் நன்நாள்தான் நத்தர் திருநாள்.

இறைமகன் மனுவுருவில் பிறந்த நாள் மரியின் மடியில் மாட்டுக் குடிலில் மனுமகன் யேசு பிறந்த நன்நாள் தனது சொந்த ஊரில் கூட மகனைப் பெற்றெடுக்க, தங்கி வாழ தனியிடமின்றி மரியன்னை அலைந்தார். "சத்திரத்திலும் இடமில்லை" என்ற வார்த்தை வரலாற்று நினைவுகள் இன்றும் கேட்கிறது.

அன்றைய சூழலின் நிலைகளில் வாழும் மக்களுக்கு ஓர் நற்செய்தி. வயல் வெளியில் தங்கியிருந்த இடையர்களுக்கு நம்பிக்கை ஒளியாக கேட்டது.

"அஞ்சாதீர் ; இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்துள்ளார்" அந்த நம்பிக்கை வார்த்தையை நம்பிய மக்களுக்கு வாழ்வு மலர்ந்தது. புதுவாழ்வு பிறந்தது. அவர்கள் குதூகலித்தனர். தேடிச் சென்றனர். பாலகன் யேசுவை கண்டு கொண்டனர். கொண்டாடி மகிழ்ந்தனர். அந்த இடையர்களே ஊருக்கு, உலகிற்கு அந்த நல்ல செய்தியை பகிர்ந்தனர். அதனை இன்றும் நினைவு கூர்ந்து நம்பிக்கையோடு கொண்டாடி மகிழ்கின்றோம்.

இந்த நம்பிக்கை வாழ்வைத் தேடி அலையும் எம் சகோதரர்களுக்கு நம்பிக்கையூட்டும் அன்புப் பகிர்வுக்காக ஏங்கும் இதயங்களில் இறைவனின் நம்பிக்கை ஒளியை ஏற்றுவதே இன்றைய இறைகாணிக்கையாகும்.

இயேசுவின் பிறப்பை தேடி அலைந்த மூவிராசாக்களும் அந்த பாலனையே கொல்லத் தேடிய ஏரோதுக்களும் இன்றும் எம் முன் காண்கின்றோம். பாலகன் யேசுவை காத்ததுபோல் இன்றைய காலத்தின் அழைப்பும் இதுவே. துன்புறும் இதயங்களின் துயர் துடைக்கும் நல் மனங்களே நம்பிக்கை ஒளியேற்றும் நல்ஞானிகளாவர். அவர்களின் செயல்களால் ஆறுதல் பெறும் இதயங்களும் பேறு பெற்றிட் நம்பிக்கை வார்த்தைகளும் நற்செயல்களும் நமது பாலான் யேசுவின் அன்பாக கிடைக்க வழி செய்வோம்.

"உன்னதங்க்ளிலே கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!
உலகில் அவருக்குகந்தோருக்கு அமைதி உண்டாகுக."
என்ற வாழ்தொலிகளை உளமார பகிர்ந்து வாழ்த்துகிறோம்.

**செ.யோசப் பாலா**
**செயலாளர் ,**
**கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்.**

## மீண்டும் வருவீரோ?

இழப்பதற்கு ஏதுமின்றி
அழுவதற்கும் திறனின்றி
மேய்ப்பன் இல்லா மந்தைகளாய்
ஏதிலிகளாய் நாமிங்கே
பரலோக மீட்பரே !
விண்ணுலகிலிருந்து நீர்
மண்ணுலகிற்கு எமக்காய்
மீண்டும் வருவீரோ ?



நக்கீரன்
யாழ்ப்பாணம்.

## புனிதனின் பிறப்பு

உலகினர் உய்ய 'உன்னதம் துறந்து
துலங்கிடும் தூய மரிகரு உறைந்து
கலங்கிடும் மாந்தர் மீட்பினை சுவைக்க
பாலனாக பிறந்த பரமனைத் துதிப்போம்
மனிதத்தை மதித்து மகிழ்வதே உயிர்ப்பு
கனிவுறு மொழிகள் பகைமையின் மறப்பு
சமஉரிமையும் அமைதியும் நிலைப்பதே சிறப்பு
இனியொரு வழிதரும் புனிதனின் பிறப்பு

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

## உலகிற்கு ஒளி தந்தார்

பூ மழையாய் மழை பொழிய
பூ மரங்கள் பூத்துக் குலுங்கும்
நல் மார்கழி மாதந் தனில்
மாட்டுத் தொழுவத்திலே
பிறந்தார் நம் யேசுபிரான்
பிறர் துன்பம் தீர்க்க மலர்ந்தார்
சிலுவைதனைச் சுமந்தார்
உலகிற்கு ஒளி தந்தார்

மாவை .நா.கஜேந்திரா

சிறப்புற வாழ்த்துவோர்

கஜமுகன்
ஹாட்வெயர்
147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2833

அண்ணா
தொழிலகம்
இணுவில்
T.P.: 021 222 3565

மங்களா கா
மங்களா வீட்டுத்த
மங்களா கட்சியறை
536,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(மனோகராசீ சந்தி)
T.P.: 021 222 8367

# ...மலர் 25-12-2009



## நத்தார் செய்தி



நத்தார் என்றால் கிறிஸ்தவர்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சி தரும் நாள்.நத்தார் என்றால் சிறுவர் , சிறுமியர் கண் முன் தோன்றுவது நத்தார் தாத்தா , நத்தார் மரம், வெடிகள் , பரிசில் பெறுதல், நத்தார்ப் பாடல்கள்.

வளர்ந்தவர்கள் பலருக்கு எவ்வளவு சிறப்பாக தாராளமாக செலவு செய்யலாம் என்ற ஆராய்ச்சி. சிலருக்கு அது மதுவுக்கும், களியாட்டத்துக்கும் உரிய நாள். தாம் விரும்பியவாறே அதனைக்கொண்டாடி மகிழ்வார் . வறியவர்களுக்கு அவர் நாமத்தில் ஏதாவது கிடைக்கும் என்ற மகிழ்ச்சி.

தேவாலயங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள்; போட்டி போட்டு நாடகங்களும், கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறுகின்றன.


குடும்பங்களில் சிறப்பலங்காரங்கள், பல்வேறு பலகாரங்கள், தான தர்மங்கள் செபதபங்கள் என அந்நாட்களில் எவ்வளவு தாராளன சிந்தனை?

இவைகள் தான் நத்தார் நமக்களிப்பனவாக இருந்து விட்டால் பயனே இல்லை. உலக இரட்சகர் அன்று மாட்டுத் தொழுவத்தில் தோன்றினார். சத்திரத்தில் அவருடைய பெற்றோர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. தேவபாலன் ஆரவாரங்கள் மத்தியிலோ , பகட்டான சூழ்நிலையிலோ தோன்றவில்லை. ஏழை வடிவில் இடையர் மத்தியில் கஷ்டம் மிக்க சூழ்நிலையில் தோன்றினார். அது நடந்தது அன்று.

இன்றும் அவர் நம்மிடம் வருகிறார். சிலர் நாட்களுக்கு மாத்திரம் அல்ல; நித்தமுமே வருகிறார். எம் அமைதியான சிந்தனையில் எமது உள்ளமாகிய சத்திரம் தேடிவருகின்றார் உள்ளே வர இடம் கொடுக்கும் ஆயத்தங்கள் செய்ய நாம் எவ்வளவு முயலுகின்றோம்? தினமும் முயலுகின்றோமா? என்று ஆராய இந் நத்தார் நாட்கள் நமக்கு உதவியா கட்டும்.

**அதி வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
**முன்னாள் பேராயர்,**
**தென்னிந்திய திருச்சபை.**

## உலகத்தை உய்வித்த இறைமகன் இயேசுபிரான்



இறைவனின் பிரசன்னம் எங்கும் இருக்கிறது. இதை நாம் வேண்டுமானால் பரிசுத்த வேதாகமத்தில் யோவான் நற்செய்தி நூலில் 1:6 ,14 இல் பார்க்கலாம். "வார்த்தை" (வாக்கு) என்னவென்பதை அறிய வேண்டும். அதைப்பற்றிச் சிந்தித்து , அச்சொல்லின் மீது கருத்துச் செலுத்தி, அதை எங்கும் கலந்து நம்மிடம் வாழ்பவர், உள்ளத்தில் உறைபவர் (அந்தர் யாமி) என்றெல்லாம் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

மேலும் இவ்வாசகத்தில் மக்கள் எவ்விதமாகக் கிறிஸ்துவின் பால் ஈர்க்கப்படுகிறார்கள் எனக் கூறுகின்றார். இதுவே பக்தியின் முதல் தோற்றம். மேலும் கடவுளிடம் ஈர்க்கப்படுதலில் ஒருவனுடைய பக்தி வளருகிறது. இங்கே நாம் அறிய விரும்புவது யாதெனில் எவ்விதம் கடவுளுடன் மக்களுக்கு ஒன்றிப்பு ஏற்படுகிறது என்பதே கடவுளை நாடித்தேடும் அனுபவத்தை ஒருவன் கடவுளையடையும் அனுவத்திலிருந்து முற்றிலும் வேறுபடுத்த இயலாது. ஏனெனில் நாம் தேடும் அவர் எங்கும் கலந்துள்ள கிறிஸ்துவாக நம்மில் ஏற்கனவே வாழ்கிறார். வார்த்தையாகிய கிறிஸ்து உலகத்தில் மானிடராகத் தோன்றினவர், உலகத்தோற்றத்திற்கு முன்பே இருந்து வந்த அந்த வார்த்தையே (Logos) மனிதனாகத் தோன்றினார். உலகத்தைப் படைத்த பின்னர் அதற்குள் கடவுள் வாழ்ந்தார். அவ்வுன்னதமானவரை உலகத்தினுள்ளே தான் அறிய வேண்டும். கடவுள் உலகத்தில் நிறைந்துள்ளார். மக்களுள்ளங்களிலும் உள்ளார். அவரை மக்கள் அறிந்து கொள்ள அவர்களின் உள்ளத்தில் வாழ்கிறார். ஆனால் மக்களோ அவரை முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. ஆகையால் தம்மைத் தாமே வெளிப்படுத்திப் பயனளிக்கக் கிறிஸ்துவாக அவதாரம் எடுத்தார். உலகெங்கும் பரவி நிற்கும் அவ்வார்த்தையைப் பற்றி நாம் தெரிந்து கொண்டோமேயொழிய அவரின் தன்மையை நாம் அறியவில்லை.

ஆகையினால் மனித உருவெடுத்த இயேசுவின் மூலமாகவும் அவரது அனுபவத்தின் மூலமாகவும் அவரது கடவுளின் சொல்லொணாப் பெருமையைக்கண்டோம்.

கடவுள் படைப்பினுள்ளிருந்து அந்தர்யாமியாக இயங்குகிறார். இந்த அந்தர்யாமியே எங்கும் நிறைந்துள்ள கிறிஸ்து எக் காலத்துமுள்ள சொல்லீசனே அவ்வார்த்தை. அவர் எங்கும் நிறைந்துள்ளார். எனினும் அவர் மனுக்குலத்தை மீட்க வந்த காலத்து பெத்லேகேமில் புனித கன்னிமரியன்னையின் வயிற்றில் அற்புதமாகத் தோற்றமெடுத்துத் தம்மை வெளிப்படுத்தினார்.

இத்தகைய சிந்தனையிலும் நிலையான சந்தோஷத்திலும் நாம் யாவரும் வாழ கடவுளே நம்மை ஆசீர்வதிப்பாராக. எல்லாம் வல்ல இறைவன் உங்கள் யாவருக்கும் சமாதானம், ஆசீர்வாதம், தரிசனம், நம்பிக்கை, உளஉடல்ஆரோக்கியம் அனைத்தையும் நல்குவராக.

கடவுளுக்கே மகிமை

**அருட்திரு . சத்தியசீலன் கிங்ஸ்பரி**
**கதிர்காமர் குருமுதல்வர்,**
**இலங்கை மெதடிஸ்த திருச்சபை,**
**யாழ்ப்பாணசேகரம்.**

## பாலகனே நீ வருக



அன்னை மரியாளின் கன்னித் திருவுதரம்
கனன்று கதறியழக் கருத்தரித்த கர்த்தாவே –நீ
பென்னம் பெரியதொரு வண்ண வடிவங்கொண்டு
பெருகிக் குருதி நீர் பெருக்கெடுத்த பாலகனே!

மாட்டுத் தொழுவத்திலே மரியாள் மடியினிலே
மனித குலம் தழைக்க மாட்சிமை பெற்றவனே –நீ
சாற்றும் பெருமையெல்லாம் சாத்தான் தனை நசுக்கி
சாந்தம் எமக்களித்த சகலோனே



கூத்துக் கும்மாளம் கூடிக் குவலயந்தான்
கூதல் அடிக்குதையா குதூகலத்தில் –நீ
மீட்டும் விரோதியை காட்டிக் கொடுக்கவென
விரைந்து எழுந்து வா குரு ராஜனே

இரட்சிப்பை நாம் நாட இரட்சனியம் நீ கூற
நல்கும் நலங்கள் தரும் நம்மவனே –நீ
நாரியனாய் இருக்க நாதியற்று நாமிருக்க
நாளை நிமிர்ந்து வா பாலகனே

சுகந்தினி முருகேசு அஞ்சல்
அதிபர் , யாழ்ப்பாணம்.

## தொழுவமதில் பாலகனை தொழுவோம்



மட்டிலா மலர்வுறும் மாட்டிடை குடிலும்
மார்கழி வெண்பனி போர்வையாய் விரிந்தது
அட்டமும் இருளொடு மூழ்கிய பொழுதினில்
ஊரவர் விழிகளும் உறங்கியே ஓய்ந்தன
பட்டாடை அணிந்தவெம் பாலகன் யேசு
பொன்னிற வைக்கோலில் இறைமகன் வந்தனன்
பட்டொளி பகர்ந்த விடி வெள்ளி ஒளிதனில்
பாலகன் பிறந்த இந்நாளும் வெள்ளியே.

அல்வையூர்
கே. ஆர்.திருத்துவராஜா

...காட்சியறை &
...த்தளபாட நிலையம்
மங்களா வீட்டுத்தளபாட
நிலையம்
153, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P.: 021 222 8367


வெங்கடேஸ்வரா
ரான்ஸ்போட் சேவிஸ்
125,127 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P.: 021 222 8306
127, பழைய
சோனகத் தெரு,
கொழும்பு–12

ஈஸ்வரன் றேடர்ஸ் &
ரான்ஸ்போட்
இல.115, 69
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 2222813
021 2224317
E.mail: gmsc@sltnet.lk
201B, Dam Street,
கொழும்பு 12
T.P.: +94 112433889
Fax: +94 112 435247

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## எளிதில் தாக்கப்படக்கூடிய நய வஞ்சகரான கடல் உயிரினங்கள்

முள்ளந்தண்டுள்ள விலங்குக் கணத்துள் அடக்கப்படும் மீன்கள் எனும் பிரிவில், இரண்டுபெரும் பிரிவுகள் உள்ளடக்கப்படலாம். அவற்றுள் ஒன்று முள்மீன்கள் மற்றையது கசியிழைய மீன்கள். கசியிழைய மீன்கள் இற்றைக்கு 400 மிலலியன் வருடங்கட்கு முன்பு தோன்றியவை. இவை சுறாக்கள், திருக்கைகள், றேய் மீன்கள் மற்றும் கைமேராக்கள் எனப பலவகை உயிர்த்தோற்றங்களை உள்ளடக்கியிருக்கின்றன. இக் கசிழைய மீன்கள் அடக்கப்படும் வகுப்பு Chondrichthyes இல் அண்ணளவாக 1000 மீன் இனங்கள் உள்ளடக்கப்படுகின்றன. அவற்றுள் 360 இனங்கள் எளிதில் தாக்கப்படக்கூடிய நய வஞ்சகரான சுறாக்கள் ஆகும். எனினும் உயிர் வாழும் எல்லா மீன்களினதும் 2% ஆனவையே சுறாக்கள் எனலாம்.



Great white shark

சுறாக்கள் தாம் வாழும் சூழல் தொகுதியின் உயர்மட்ட இரைகௌவிகளாக சிறப்பாக இசைவாக்கமடைந்து காணப்படுகின்றன. இவை கடல்வாழிடத்தில் சூழல் தொகுதியின் சமநிலையைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிப்பதுடன் ஆழியில் வாழும எல்லா உயிர் அங்கிகளையும் கொலை செயயும் வஞ்சகர்களாகத் திகழ்கின்றன. எது எவ்வாறாயினும் இவ் இயக்கவியலுக்குரிய சமுத்திர இரை கௌவிகளின் தொடர்ச்சியான நீண்ட கால உயிர் வாழும் தன்மையானது இன்று மனிதனின் செயற்பாடுகளால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது எனக் கூறுவதில் ஐயமில்லை. இவற்றின் உயிர் வாழும் தன்மையை நிசசயப்படுத்த சரியான அவசரமான முறைமைகள் கையாளப்படாத பட்சத்தில் அவை மிக விரைவில் உலக சமுத்திரங்களில் ஆபத்தான நிலமை (Endangered) ஆக மாறுவதற்கு வாய்ப்பளிக்கும்.

### அச்சுறுத்தல்களும் மென்மையான தன்மையும்

உலகம் பூராகவும் உள்ள மக்களின் மனதில் இவ் உயர் மட்டத்துக்குக் கூர்ப்படைந்த இரை கௌவிகள் ஓர்கூடாத கொலைகாரனெனும் பெயரைப்பெற்றுவிட்டன. சரித்திர வரலாற்றில் துஸ்ட துன்மார்க்கமான உயிர் தோற்றங்களெனவே இவை வாணிக்கப்படுகின்றன. பொது மக்களிடையே எதிர் பிரதியை பெற்ற சுறாக்கள உலகளாவிய ரீதியில் ஓர் முக்கிய மீன் வளங்களாக பிடிக்கப்படுகின்றமை எலலையற்ற சுறாமீன்கள் சுரண்டப்படும் நிலையொன்றினை தோற்றுவிக்குமளவுக்குத் தற்போது வந்துவிட்டது.

தற்போது அநேக வகையான சுறாவின் விளைபொருட்கள் பல்வேறு தேவைகட்கு மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது தசை, செட்டைகள் உணவாகவும், ஈரல் எண்ணைகள் விற்றமின்களாகவும, மருத்துவப் பொருட்களாகவும், தோல் பதனிடப்பட்டு தோலால்ன பொருட்களை செயவதற்கும், சத்திர சிகிச்சைக்குரிய பதிக்கும் உறுப்புக்களைச் செய்வதற்கும், குருதியும் கசிழையமும் மிகைநிரப்பு உடல் நல உணவாகவும், பற்கள் அலங்கார நகைகள் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது சுறா விளை பொருட்களின் மருத்துவப் பயன்பாடுகள் பரிசோதிக்கப்பட்டு புதிய குணப்படுத்தக்கூடிய இயல்புகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் சுறாக்களின் விழிவெண்படலமானது மனிதனுக்கு வெற்றிகரமாக மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. சில விஞ்ஞானிகள் சுறாவின் கசிழையத்திலிருந்து பிழிந்தெடுத்த சாறானது தேகத்தில் தோன்றும் கட்டிகளின் வளர்ச்சியைத் தடுக்கும் ஆற்றலுடையதாயிருப்பதுடன் இவை புற்று நோய்க்கெதிரான மருந்தாகத் திகழலாம் என எடுத்துக் கூறியுள்ளனர். சுறாக்களின் விளைவுகள் மக்களால் பயன்படுத்தப்படுமளவு கூடுவதால் சுறாக்களுக்குள்ள கிராக்கி 1980 ஆம் ஆண்டில் இருந்து விரைவாக அதிகரிக்கின்றது.

சில பாரம்பரிய Artisanal மீன்பிடி முறையிலும் சுறாக்கள் அறுவடை செய்யபபடுகின்றன. அதே போன்று கைத்தொழிலுக்குரிய ட்ரோலர் மற்றும் டியுனா மீன்பிடியின் போது சுறாக்கள் உபவிளைவுகளாகப் பிடிக்கப்படுகின்றன. அநேகமான இவ் உபவிளைவ்வுகளுக்கான புள்ளி விபரங்கள் பதிவு செய்யப்படுவதில்லை. இலக்குள்ள உயிரினங்களின் உற்பத்திக்கான தரவுகளே பதிவு செய்யப்படுகின்றன. உபவிளைவுகளுக்கான புள்ளி விபரங்கள் அறியப்படாதிருந்தும் கூட உலகளாவிய ரீதியில் கசிழைய மீன்களின் மீன்பிடியானது வருடத்துக்கு 700000 தொன்களை தாண்டிவிட்டது.

சுறாக்கள் நீண்ட காலம் வாழும் இனப்பெருக்கத்திறன் குறைந்த இனங்களாகும். இவை அவற்றின் வாழ்க்கைச்சரிதத்துக்குரிய சிறப்பியல்பான நீண்ட சூற்காலம் உடைய விலங்குகளாகும். அத்துடன் இவை மெதுவான வளர்ச்சி வீதம், தாமதமான இலிங்க முதிர்ச்சி, குறைந்த முட்டைகளின் எண்ணிக்கை எனும் இயல்புகளைக் கொண்டுள்ளது. எனவே தான் இவை சமுத்திரங்களில் இயற்கையான நிபந்தனைகளில் வாழ நன்கு இசைவாக்கப்பட்டிருப்பினும் பாதகமான மனிதத் தலையீடுகளால் தோற்றுவிக்கப்படும் காரணிகளால் முற்றாக அழிவடைதலுக்குட்பட்டு இலகுவில் நலிவுறக்கூடியவை எனப்படுகின்றது.

இவை நேரடியான மீன்பிடி மூலமும், மறைமுகமான உபவிளைவுகளாக இலக்கற்ற மீன்பிடியில் பிடிபடல் மூலமும், வாழிடத்தை பல்வேறு தேவைகட்கு திரிபுபடுத்தல் அல்லது முக்கியமான கரையோர சதுப்பு நில வாழிடங்களை அபிவிருத்தி செய்வதனால் சுறாக்களின் வாழிடத்தை அழித்தல் மூலமும்மற்றும் எல்லா விதமான தரையை அடிப்படையாகக் கொண்ட கடல் நீர் மாசடைதல் மூலமும் அழிவுக்குட்படலாம். எனவே தான் விஞ்ஞானிகளும் பாதுகாவலர்களும் சுறாக்களின் எல்லையற்ற மீன்பிடியானது நிலைத்து நிற்கும் தன்மையை நிலை நாட்டாது என எச்சரித்துள்ளனர். அநேகமான இலக்கான இனங்கள் மிகையான அறுவடைக்குட்படுத்தப்பட்டுள்ளன எனவும் எச்சரித்துள்ளனர்.

சிலர் சுறா மீன் பிடியில் சுறாக்களைப் பிடித்து செட்டைகளை அகற்றி விட்டு காயப்பட்ட சுறாக்களை கடலுள் வீசி விடுகின்றனர். இது மிக இரக்கமற்ற அநியாயமான செயலாகும். இச் செயன்முறை பாதுகாப்பு பிரச்சினைகளை மட்டுமன்றி அறநெறிப் (ethical) பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றது.

நீண்டகாலம் வாழும் குறைந்த எண்ணிக்கையான இளநிலைகளை உற்பத்தியாக்கும் இனங்களின் குடித்தொகையை அறுவடை செய்வதென்பது குறுகிய காலம வாழும் அநேக எண்ணிக்கையான இளநிலைகளை உற்பத்தி செய்யும் இனங்களை அறுவடை செய்வது போலன்றி மிகுந்த கவனத்துடன் செய்யப்பட வேண்டியதொன்று. ஓர் குறிப்பிட்ட சுறா இனத்தினை இலக்குள்ள மீன்பிடியில் அறுவடை செய்யும் போது ஆரம்பத்தில் பிடிபடும் வீதம் கூடிக்கொண்டு செல்லும். ஆனால சில பத்தாண்டுகளில் அதிகூடிய ஓர் உச்ச அறுவடைப் புள்ளியின் பின்பு சடுதியாக இப் மீனினம் பிடிபடும் அளவு குறைவடையும். இது இற்றைவரை நிகழ்த்தப்பட்ட ஆராய்ச்சிகள், படிப்புகளிலிருந்து தெட்டத் தெளிவாக விளக்கப்படுகின்றது.



Bull shark

முற்றாக அழிவடையும் இந் நிலைமை தோற்றுவிக்கப்பட மிகவும் பிரதான காரணம் மிகவும் குறைந்த இளநிலைகள் குடித்தொகையில் புதிதாகச் சேர்க்கப்படலேயாகும். (Low recruitment). இவ்வாறான குடித்தொகை வீழ்ச்சிக்கான பதிவு செய்யப்பட்ட உதாரணங்கள் வட அத்திலாந்திக்கின் Norwegian porbeagle Shark (*Lamna nasus*) மீன் பிடியும் Calefornia இன், Soupfin Shark (*Galeorhinus galeuas*) மீன் பிடியும் ஆகும். துறைசார் நிபுணர்களின் கருத்துப்படி சுறா மீன்பிடியின் நிலைத்து நிற்கும் அளவானது அவற்றின் உயிர்த்திணிவின் 10% ஆனவை மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அறுவடைக்குட்படுத்தப்படும் போதே பேணப்படலாம்.

உலகளாவிய ரீதியில் கடற்கரையோர பகுதியில் வாழிடமானது மாற்றியமைக்கப்படல் சுறாக்குடித்தொகைக்கு இன்னுமோர் அச்சுறுத்தலாகத் திகழ்கின்றது. அநேகமான சுறாக்கள் தமது இளநிலைகளின் வாழிடமாகக் கரையோரங்களையே பயன்படுத்துகின்றன. நிறையுடலி சுறாக்கள் தமது இனப்பெருக்கத்துக்காக இக் கரையோரங்கட்கு வருகை தந்து செல்வனவாய் உள்ளன. இளநிலைகள் கூடுதலாக சதுப்பு நிலங்கள, நிழலான கண்டல் தாவர சூழல் தொகுதிகளில் வாழ்கின்றன. எனவே கடற்கரையோரப் பகுதியில் நிகழும் எல்லாவிதமான மனித அபிவிருத்திக்கான செயற்திட்டங்களும் சுறா இனங்களில் உயிர் வாழும் திறனுக்கு அச்சுறுத்தலாகத் திகழ்கின்றன. மனித அபிவிருத்தியானது சுறாக்களின் வாழிடத்தைக் மாற்றியமைப்பது மட்டுமன்றி அதிகூடிய போசணை மற்றும் இரசாயன மாசாக்கலுக்கும் உட்படுத்துகின்றது.

இக்கரையோரப் பகுதிகளிலும் சதுப்பு நிலங்களிலும் நிகழும் செறிவான மீன்பிடிச் செயற்பாடும் இம் முக்கிய வாழிடங்களை அழித்து தரமற்றதாக்குகின்றன. கடலில் காணப்படும் குப்பைகளும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கலாநிதி திருமதி சிவசாந்தினி குகநாதன்
தலைவர் மீன்பிடியியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 11

**நில நடுக்கத்தை அளவிடப்பயன்படுத்தப்படும் கருவி எது?**

**விடைகளை 06.01.2010 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி**

Mr. V. Senthil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna. Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப்பணப் பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட, மீன்பிடியியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர் :
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழக கிளை.

**புதிர் 9 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**திருமதி.பி. ஜெரிமயா**
**42/2 அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**புதிர் 10 இற்கான விடை : Squalenee**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 11

சரியான விடை :..............................................
முழுப்பெயர் :..............................................
முகவரி :..............................................
:..............................................
கையொப்பம் :..............................................

# நத்தார் தின சிறப்பு மலர் 25-12-2009


புனிதரின் பிறப்பு


எம் துயர் துடைக்க
மண்ணுலகில்
வந்துதித்த-யேசுவே
உன் பிறப்பால்
எம் வாழ்வு
ஒளிமயமாகட்டும்

சித்தூர் விஜயகாந்தன்

அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள்

புதுவருட மலிவு விற்பனை

- JAPAN T.V கள் 29", 21", 14" மிக குறைந்த விலையில்...
- யாழ். நகரில் எங்கும் பெற முடியாத உறுதியான உத்தரவாதம் எம்மிடம் மட்டுமே
- யாழ். மாவட்டத்தில் எந்த வியாபாரிகளுக்கும் விசேட விலையில்
- விரையுங்கள்! ஓடுங்கள்! முந்துங்கள் எங்கள் ஏதாவது ஒரு கிளைக்கு




மதன் எலக்ரோனிக்ஸ்

சுதுமலைச்சந்தி, மானிப்பாய்
தொ.பே: 0777 448668
021 7900728
021 7901574

பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்

- 360/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
- சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்
- மவுண்கார்மேல் றோட், குருநகர்.

அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்



லாவண்யா பல் மூக்கு கண்ணாடி அகம்.

வடமராட்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது நெல்லியடிக் கிளை தினமும் திறந்திருக்கும் மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப்பற்கள், மிதப்புப்பற்களுக்கான நிரந்தர கிளிப் என்பற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (போதனா வைத்தியசாலை முன்பாக)
தொ. பே. இல :021 222 9053

கிளை- பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (பொலிஸ் நிலையம் முன்பாக)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

சரவணா புடவையகம்
நல்லூர்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு மலிவு விற்பனை
01.12.2009-31.12.2009 வரை மட்டும்

New Selection

| | |
|---|---|
| இந்தியன் சீக்குன்ஸ் சாறி (FULL WORKED) | 1900/= |
| இந்தியன் திரட்வேக் சாறி (FULL WORKED) | 1800/= |
| இந்தியன் சில்க்சாறி (OFFICIAL SAREE) | 650/= |
| இந்தியன் கொட்டன் சாறி (OFFICIAL SAREE) | 850/= |
| இந்தியன் கொட்டன் சாறி (RICH COTTON VIJAYALAKSMY 6.20M) | 1500/= |
| இந்தியன் சில்க் பஞ்சாபித்துணி (NO: 1 SPECIAL QUALITY GURUKUPA) | 1000/= |
| இந்தியன் கொட்டன் பஞ்சாபித் துணி (RICH COTTON SPECIAL QUALITY) | 1300/= - 2400/= |
| பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபித்துணி [லைனிங் தேவையில்லை] | 700/= |

எங்கும் கிடைக்காத விலையில்

இன்றே விரையுங்கள்

NO:1

இந்தியன் சாறிகள், பஞ்சாபித் துணிகள் ஏராளம்! ஏராளம்!
மிகமிக மகத்தான விலைக் கழிவில் உள்ளது.



'வாருங்கள் வந்து பாருங்கள்'

குறிப்பு: (ஏழு நாட்களும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை கடை திறந்திருக்கும்)

SARAVANA TEX

526, பருத்தித்துறை வீதி,
நல்லூர் வீதி (பின் வீதி), சிவன் கோயில் அருகில்,
யாழ்ப்பாணம்.

T.P.: 021 791 2434

ஏஷியன் பெயின்ற்ஸ் விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் நத்தார் நல்வாழ்த்துக்கள்

உங்கள் இல்லங்களை அழகுபடுத்த மனம் கவரும்
வர்ணங்களை அள்ளி வழங்குகிறது

ASIAN PAINTS

ஏஷியன் பெயின்ற்ஸ்

ஏஷியன் பெயின்ற்ஸ் வேதர்ரவ் அல்ரிமா
வெயில், காற்று, மழையின் தாக்கத்திற்கு
தாங்கும் வகையில் உருவாக்கப்பட்டதுதான்

ஏஷியன் பெயின்ற்ஸ் வேதர்ரவ் அல்ரிமா
(Asian Paints Weathertuff Ultima)

7 வருட உத்தரவாதம்

உங்கள் வர்ணப் பூச்சு தேவைகள் அனைத்திற்கும் உங்கள்
பிரதேச ஏஷியன் பெயின்ற்ஸ் விற்பனையாளர்களை நாடுங்கள்




ஏஷியன் பெயின்ற்ஸ்
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

யாழ்ப்பாண இரும்பகம்

32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ. பே:- 021 2227028

# முகாம்களிலுள்ள ஒரு இலட்சத்து 8,573 பேரை மட்டுமே இன்னும் மீள்குடியமர்த்த வேண்டும்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க



(கொழும்பு)

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 573 பேரை மட்டுமே மீளக்குடியமர்த்த வேண்டும்.

முகாம்களிலிருந்து வெளியே சென்றவர்களில் 21 ஆயிரத்து 80 பேர் உரிய தினத்தில் முகாம்களுக்கு மீண்டும் திரும்பவில்லை என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 573 பேர் மட்டுமே இன்னும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். இவர்களில் 87 ஆயிரத்து 241 பேர் வவுனியா முகாம்களில் இருக்கின்றனர்.

ஏனைய 21 ஆயிரத்து 332 பேர் முகாம்களிலிருந்து வெளியே சென்றவர்களாவர். அரசாங்கத்தின் அறிவிப்பிற்கு பின்னர் டிசம்பர் முதலாம் திகதி முதல் ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 169 பேர் முகாம்களிலிருந்து வெளியே சென்றுள்ளனர். அவர்களில் இரண்டு இலட்சத்து 02 ஆயிரத்து 242 பேர் மீளவும் முகாம்களுக்கு திரும்பியுள்ளனர்.

வெளியே சென்றவர்களில் 16 ஆயிரத்து 595 பேர் உரிய தினத்திலும் 19 ஆயிரத்து 152 பேர் வருகை தரவேண்டிய தினத்திற்கு பின்னரும் முகாம்களுக்குத் திரும்பி வந்துள்ளனர்.

முகாம்களில் நெருக்கடியான நிலைமைகளுக்கு அவர்கள் முகம் கொடுத்திருந்தால் முகாம்களுக்கு மீண்டும் திரும்பியிருக்கமாட்டார்கள்.

வெளியே சென்றவர்களில் 26 ஆயிரத்து 180 பேர் மட்டும் முகாம்களுக்கு உரிய தினத்திற்குள் திரும்பவில்லை.

மக்களை அரசாங்கம் முகாம்களில் பலவந்தமாக தடுத்து வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டதுடன் அங்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. சிலர் இணைந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் தாக்கல் செய்தனர்.

இதனால் நாம் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

இதுவரையிலும் கிளிநொச்சியில் 14 ஆயிரத்து 18 பேரும், யாழ்ப்பாணத்தில் 59 ஆயிரத்து 890 பேரும், மட்டக்களப்பில் 2 ஆயிரத்து 514 பேரும் திருகோணமலையில் 6 ஆயிரத்து 700 பேரும், மன்னாரில் 10 ஆயிரத்து 069 பேரும், வவுனியாவில் 23 ஆயிரத்து 979 பேரும், அம்பாறையில் 591 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 ஆயிரத்து 640 பேரும், கண்டி மாவட்டத்தில் 12 பேரும், பொலன்னறுவை மாவட்டத்தில் ஒருவருமாக மொத்தமாக 1 இலட்சத்து 27 ஆயிரத்து 352 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

முகாம்கள் மூடப்படுவதனால் தற்காலிக முகாம்களாக இருந்த பாடசாலைகள் முழுமையாக கல்விச் செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றன.

இதுவரையிலும் சுமத்திபுரம், மருதமடு மற்றும் 6 பீ வலயம் ஆகிய முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

புல்மோட்டை முகாம் வியாழனன்றும் தர்மபுர முகாம் இன்னும் ஐந்து நாட்களுக்குள்ளும் மூடப்படும் என்றார்.

(6-9)

## ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியர்களுக்கும் அதிகரித்த கொடுப்பனவு

ஓய்வூதியம் பெறுவோருக்கு 2 ஆயிரத்து 375 ரூபா அதிகரித்த கொடுப்பனவை வழங்குவதுடன் அரச ஊழியர்களுக்கு 5250 ரூபா அதிகரித்த கொடுப்பனவை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

அத்துடன் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவினங்களைக் கவனத்தில் கொண்டு நாட்சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு 175 ரூபா வழங்கும் வகையில் அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இதற்கான சுற்று நிருபமொன்றையும் வெளியிட்டுள்ளது.


ஜனவரி முதல் வழங்கப்படவுள்ள இவ் அதிகரித்த கொடுப்பனவுகளை அனுப்பி வைத்ததற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் டி. திஸாநாயக்க அனைத்து திணைக்கள தலைவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மோதல்கள் இடம்பெற்று வந்த காலப் பகுதியைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களுக்காக அறிவிக்கப்பட்ட அதிகரித்த விலைகளால் கணிசமான மக்கள் தமக்கான அத்தியாவசிய நுகர்வுக்கான வாய்ப்புக்களை இழந்திருந்தமை யாவரும் அறிந்ததே.

(6-9)

# ஈழத்துச் சிதம்பரத்தான் திருவடிக்கு...

## இன்று மூன்றாம் நாள் உற்சவம்



மண்டபச்சுவரில் சிவபெருமானின் திருவிளையாடல் காட்சி

## தில்லையிற் போலத் திண்ணபுரத்திலும் திருவெம்பாவை விழா நிகழும்

இத்திறத்து நல் விழாவினியல்பு சிறிதுரைத்தாம்
இரு கண்ணாற் கண்டார்க்குப் பேரின்பமருளும்
அத்தில்லைப் பெருந்தலத்தி லாகமங்கள் சொன்ன
அருணெறியிற் பூசை விழா வனைத்து நடை பெறுமாம்
மெய்த்திறத்து வேதியருந் தொண்டர்களும் வாழும்
விண்ணோங்கு சோலைவளர் வியன்றிண்ண புரத்தும்
அத்திறங்கள் வழுவாமல் விழா நிகழுமாற்றான்
அடியாரீழச் சிதம்பர மென்றன் பூரச் சொல்வர்

## திருமால் சிவநடனங் காணுதல்

சேவடிகள் காண்பனெனக் கீழ்ச் சென்றுங்
காணாத செங்கண் மாயன்
காவளரும் பொன்னாலைப் பதியிருந்து
சிவநடனங் காணுங் கோயில்
ஆவினங்கள் மேய்தலைவிட் டருகணைந்து
குழல் கேட்டேயடங்கி நிற்ப
மேவு திண்ணமாபுரத்துக் குணதிசையில்
விண்ணோங்கி மிளருமன்றோ.

ஈழத்துச் சிதம்பர புராணம்

# எளிதில் தாக்கப்படக்கூடிய.....

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுறாக்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றன. குறிப்பாக பிளாஸ்ரிக்குகள், அழிந்த கழித்து விடப்பட்ட நைலோன் மீன்பிடி வலைகள் ஏன்பனவும் சுறாக்களுக்குத் தீங்கு விளைவிப்பனவாய் உள்ளன.

கடல் உணவுச் சங்கிலியின் உச்சியில் காணப்படும் முனைக்குரிய இரை கௌவிகளான சுறாக்கள் அதி உயர் செறிவில் மாசாக்கிகளைக் கொண்ட உயிரியலுக்குரிய சேகரிக்கும் தன்மையுள்ள அபேட்சகர்களாகும். அவை மாசாக்கிகளை உயா செறிவில் கொண்டிருப்பதனால் அவற்றுக்கே விளையும் உடல் நல தாக்கம் உற்பத்தித்திறனுக்கேற்படும் தாக்கம் என்பன இதுவரை அறியப்படவில்லை. ஆனால் தரையில் வாழும் முனைக்குரிய இரைகௌவிகட்கு முடிவு செய்ததன் படி இந்நிலமை பாதகமானதொன்றே.

### இந்து சமுத்திரத்தில் சுறாக்கள்

இந்து சமுத்திரமானது உலகில் காணப்படும் சுறா இனங்களில் 30% ஐக கொண்டுள்ளது. இங்கு இதுவரை ஆகக் குறைந்தது 125 இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை 8 வருணத்துள் அடக்கப்பட்டுள்ளன. 22 குடும்பங்களுக்கிடையில் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில இனங்கள் இந்து சமுத்திரத்தினூடாக அதிகம் பரந்து காணப்படுகின்றன. ஏனையவை மட்டுப்படுத்தப்பட்ட பரவலுக்குள்ளாகியுள்ளன. உலகில் பல சுறா இனங்கள் காணப்படுவதுடன் 28 இனங்கள் இந்து சமுத்திரத்தின் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றன. இந்து சமுத்திரத்தின் சுறா மீன்பிடியானது நன்கு ஆவணப்படுத்தப்படவில்லை. அத்துடன் சுறா மீன்பிடி புள்ளி விபரவியலும் அரிதாகவே உள்ளது.

இலங்கையிலும் இந்து சமுத்திரத்தின் ஏனைய கரையோரப்பகுதியிலும் உள்ள மீனவர்கள் நீள் கயிற்றுத்துண்டில் முறையால் சுறாக்களைப் பிடிக்கின்றார்கள். இம்முறை பிரதானமாக டியுனா (tuna) மீன்களைப் பிடிக்க பயன்படுத்தப்பட்டாலும்




இலக்குள்ள சுறா மீன்பிடிக்கும் இம்முறையே பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் இந்து சமுத்திரத்தில் பூவலை மீன்பிடியும் பெருமளவு சுறாக்களைப் பிடிக்க ஏதுவாகின்றது. பொதுவாக Mackerel Sharks இம்முறையால் பிடிபடுகின்றன. மேற்கு இந்து சமுத்திரத்தில் Purse Seine முறையானது அனுமதி பெறப்பட்டு தொழிற்படுகின்றது. அத்துடன் Fish Aggregating Devices (FADS)ன் விரிவான பாவனையானது இலக்கற்ற மீன் பிடியாகிய சுறாக்களை கவருவதாயும் உள்ளது.

சுறாக்ககள் சுற்றாடலுக்கு மிக அழகாக இசைவாக்கப்பட்டுள்ளதுடன் அசையும் திறனில் வல்லவையாகவும் வேட்டையாடுவதில் வினைத்திறனுடையதாகவும் காணப்படுகின்றன. ஏனைய இரைகௌவிகளைப் போன்றே உணவுக்காகக் கொலை செய்கின்றன. சில இனங்கள் (உதாரணமாக Barking Shark: *Certorhinus maximus*) திமிங்கலச் சுறாக்கள் போன்று முற்றாகத் தீங்கற்றவை. ஆனாலும் மக்கள் பொதுவாக சுறாக்கள் பற்றி கொண்டுள்ள எதிர் பிரதிபலிப்பினால் அவை கொடுமை புரிவனவாகவே கருதப்படுகின்றன. இவ் எதிர் பிரதிபலிப்புக்கள் முக்கியமான சில இனங்களினால் தான் ஏற்பட்டன என்பது தெளிவு. அதாவது Great white Shark (*Carcharodon Carcharias*), tiger Shark (*Galeocerdo cuvier*), Bull Shark (Grey Shark: *Carcharhinus leucas*) என்பனவே அடிக்கடி மனிதனைத் தனது எதிராளிகளாக அதாவது உணவு மூலமாகப் பயன்படுத்துகின்றன.

உலகளாவிய ரீதியில் சுறாக்களானவை எல்லையற்ற அறுவடை செய்யப்படலாகாதென் மக்களால் உணரப்பட வேண்டும். எனவே அவை அழிவடையும் நிலைக்கு அறுவடை செய்யப்படாது கவனமாக முன்னெச்சரிக்கையுடன் பேணப்படல் வேண்டும். தற்போது சுறாக்களை முகாமைத்துவம் செய்ய சில முகாமைத்துவ திட்டங்களே வகுக்கப்பட்டுள்ளன. எனவே நிலைத்து நிற்கக்கூடிய மட்டத்தைப் பெறுவதற்கு ஓர் திடகாத்திரமான முயற்சி அவசியம் தேவைப்படுகின்றது. அதாவது finning தவிர்க்கப்பட்டாலும் கரையோர வாழிடங்கள் பேணப்படலும் மிக முக்கியமானவையாகும்.

விஞ்ஞானிகள் ஏற்கனவே சில இன சுறாக்களுக்கு ஏற்பட்டுள்ள அபாயம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி அவற்றைப் பாதுகாப்பதில் சில நாடுகள் முனைப்பாயுள்ளன. உதாரணமாக South Afirica, Australia, USA ன் சில பகுதிகளில் Great White Shark ஆனது பாதுகாக்கப்பட்டுள்ளது.

சுறா பாதுகாப்பின் உடன்பாடான நவீன அபிவிருத்தி என்னவெனில் உலகில் பல பாகங்களிலும் சுறாக்களின் பாதுகாப்பானது சுற்றுப்பயணத்தின் போது சுறாக்களை அவதானிப்பதை ஊக்குவிப்பதனால் ஊக்குவிக்கப்படுகின்றது. அந்தமான் கடலின் பகுதிகளாக Similan Surui தீவுகளிலும், Phuket, Thailand இலும் சுறாவை அவதானிப்பதற்கு Diving வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சிலர் இரைகளைப் பயன்படுத்தி சுறாக்களைக் கவர்வதால் ஒளிப்படமெடுக்கிறார்கள். எனவே சுறாக்களை அழியாது பாதுகாப்பதற்கான செயனமுறைகள் இந் நூற்றாண்டில் எல்லா மக்களாலும் பேணபடல் வேண்டும் எனக் கூறுவதில் ஐயமில்லை.

அன்பு செலுத்த உத்தரவு இடுவதே எனது இறுதிக் கட்டளை.

~ இயேசுநாதர்

வலம்புரி

## பரமபிதாவே பாவப்பட்ட தமிழ் மக்களை மீட்டருளும்

இலங்கைத் தமிழர்கள் ஏதோவொரு வகையில் பாவம் செய்தவர்கள். அவர்கள் தமது உரிமைக்காக பல போராட்டங்களை நடத்தினார்கள். அதனூடான இழப்புகளும் ஏராளம்.

ஏனோ தெரியவில்லை இயற்கையும் செயற்கையும் ஈழத்தமிழர்களுக்கு விரோதமாகவே இருந்தன.

இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை இந்திராகாந்தி ஈழத்தமிழர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டவர்.

அவரின் ஆளுமைக்கு சிங்கள அரசுகள் நடுங்கின. ஆனால் எங்களின் துரதிர்ஷ்டம் அவர் திடீர் மரணம் அடைந்தார்.

இதேபோன்று தமிழகத்தின் முதல்வராக இருந்த எம்.ஜி.இராமச்சந்திரன் ஈழத்தமிழர்களின் உடன் பிறப்பு என்பதை சொல்லிலும் செயலிலும் நிரூபித்தவர்.

சிலபேர் போல் அவருக்கு கவிதை எழுதத் தெரியாமல் இருந்திருக்கலாம்.

ஆனால் அவரிடம் உள்ளும் புறமும் தமிழ் உணர்வு ஊறெடுத்தது. எங்கள் விடிவிற்காக அவர் வழங்கிய உதவி ஏராளம்.

அவர் இன்று உயிரோடும் தமிழகத்தின் முதல்வராகவும் இருந்திருந்தால் வன்னி யுத்தம் என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்காது.

தமிழ் மக்கள் அநியாயமாகப் பலியாகி இருக்க மாட்டார்கள்.

என்ன செய்வது அவரை முன்னதாகவே இழந்துவிட்டோம். ஈழத்தமிழர்களுக்கு நன்மை செய்யக்கூடியவர்களை இழந்த அதே நேரம், எப்படியெல்லாம் எங்களைக் கழுத்தறுக்க முடியுமோ அதை முழுமையாகச் செய்யக்கூடியவர்கள் பொறுப்பான பதவிகளில் அமர்ந்து கொண்டனர்.

எங்களுக்காக உண்ணாவிரதம், தமிழகக் குழுவின் யாழ்ப்பாண விஜயம் என மிகப் பெரும் போலித்தனம் நடந்தேறியது.

ஆக, ஈழத்தமிழர்கள் பாவம் செய்தவர்கள் என்பதை இதனூடு ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

இதனால்தான் தந்தை செல்வநாயகம் ஈழத் தமிழர்களை கடவுள்தான் காக்க வேண்டும் எனக் கூறினார் போலும்.

தந்தை செல்வநாயகம் கூறிய கருத்திற்குள் இன்னுமோர் பொருளும் அடங்கியுள்ளது.


அதாவது என்னோடு அரசியல் நடத்துபவர்கள் – எனக்குப் பின் எனது போட்டோவைக் காட்டி அரசியல் நடத்துவோர் இவர்களில் பலர் தமிழ் மக்களுக்கு அநீதி இழைப்பர்.

அவர்களிடம் பதவி ஆசையைத் தவிர வேறு எதுவும் கிடையாது என்பதை தீர்க்க தரிசனத்தால் புரிந்து கொண்டே தந்தை செல்வநாயகம், ஈழத்தமிழர்களை கடவுள்தான் காக்க வேண்டும் என்றார் என்பதை இப்போது உணர முடிகின்றது.

எல்லாம் வல்ல பரமபிதாவே, பாலன் இயேசுவின் பிறப்பு தமிழ் இனத்திற்கு விடிவைத் தரட்டும். நீயே மீட்பர். எல்லாம் இழந்து துன்புறும் தமிழ் மக்களை பாவத்தில் இருந்து மீட்டருளும். உம் கிருபைக்காக மன்றாடுகின்றோம்.

# அனைத்து மக்களையும் சுதந்திர பிரஜைகளாக சமாதான தேசத்தில் வாழ வைப்போம்!

## நத்தார் தினச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மனுக்குலத்தின் கண்களுக்கு ஒளி பிறந்து, சமாதானத்திற்கும், அமைதிக்கும் எதிரான இருள் விலகிய நத்தார் பெருநாளை இனிவரும் காலங்களில் எங்கள் உரிமைக்கு வழி திறக்கும் என்ற நம்பிக் கையோடு நாம் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடுவோம் என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது நத்தார் தின நற் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒரு ஏரேது மன்னனை காப்பாற்றுவதற்காக எல்லா குழந்தைகளும் கொல்லப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது போல், சமாதானத்தின் எதிரிகளை காப்பாற்றுவதற்காக இங்கு எமது மக்களும் கொல்லப்பட நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள் என்றும், ஆனாலும் அந்த அவலநிலையில் இருந்து எமது மக்கள் இழப்புக்களின் பின்னராவது மீட்சி பெற்றிருப்பதும், சமாதானத்தின் தூதுவர்களை சமாதானத்தின் எதிரிகளால் அழிக்க முடியாமல் போனமையும் நியாயத் தீர்ப்பாகும்.

சமாதானத்தையும், அமைதியையும், சமவுரிமையையும் மக்களின் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துவதற்காக நாம் தமிழ் பேசும் மக்களின் மனங்களில் இருந்து தோன்றி வந்தவர்கள். எமது மக்களின் இந்த நம்பிக்கையை ஏற்று நடைமுறைச்சாத்தியமான வழிமுறையில் எல்லா பிரச்சினைகளில் இருந்தும் அனைத்து மக்களையும் விடுவிக்க உழைப்பதற்கு தொடர்ந்தும் மக்கள் பக்க துணையாக இருக்க வேண்டும்.

நாம் கொல்லப்பட்டு விடுவோமோ என்ற மரண அச்சத்தில் எங்கள் குழந்தைகளோடும், உறவுகளோடும் பாதுகாப்பான இடம் தேடி ஓட வேண்டிய அவலங்கள் இனி இல்லை. அவ்வாறு யுத்த சூழலுக்குள் இருந்து தப்பித்து ஓடி வந்த எமது உறவுகளின் கண்ணீரையும் காயங்களையும் துடைத்து அனைத்து மக்களையும் சுதந்திர பிரஜைகளாக ஒளி பிறந்த நித்திய சமாதான தேசத்தில் வாழவைப்போம் என்ற நம்பிக்கையோடு நத்தார் தினத்தை கொண்டாடும் அனைத்து உறவுகளுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது. (ச)


## தடகள நிகழ்ச்சிகள் கருத்தரங்கு

விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியமும் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள விளையாட்டு விஞ்ஞான அலகில் கல்வி கற்கும், கல்வி கற்று வெளியேறிய மாணவர்களுக்கான தடகள நிகழ்ச்சிகள் தொடர்பான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி யா/ திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கினை இலங்கை மெய்வல்லுநர் சங்கப் பொதுச் செயலாளர் நடத்தவுள்ளார். (ச)

## திருவாசகம் முற்றோதல்

புங்குடுதீவு, மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் மாணிக்கவாசகர் சுவாமிகள் மடாலய சபை திருவாசக மடத்தினர் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நடத்தவுள்ளனர். (ஓ)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### உயர்வு தாழ்வு இல்லை

வலது கை முற்றிலும் சுத்தமான செய்களைச் செய்யவும், இடது கை சுத்தமானவற்றுடன் அசுத்தமான செயல்களைச் செய்யவும் பயன்படுகிறது.

ஆனால் கோயிலுக்குப் போனாலோ, பெரியவர்களை வணங்கினாலோ இரண்டு கைகளையும் கூப்பியே வணங்குகிறோம். மனிதனைப் பொறுத்தவரை வலதுகை உயர்ந்தது, இடது கை தாழ்ந்தது.

ஆனால் இறைவனையும், மகான்களையும், பொறுத்தவரை உயர்தோர், தாழ்ந்தோர் இல்லை என்பதே இறை வழிபாட்டுத் தத்துவம்.

## வெள்ளி நற்சிந்தனை 103

# பக்தியின் மொழி தமிழ்

வாழ்க்கையில் அமைதி வேண்டுமாயின் வழிபாட்டை மேற்கொள்ள வேண்டுமெனச் சம்பந்தர் கூறுகிறார். 16 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்து பக்தி நெறியில் நின்ற அவருக்கு இறைவழிபாடு பற்றி ஒரு தெளிவு இருந்தது. இத் தெளிவு அவரது பிறப்புச் சூழலாலும் வளர்ப்பு நெறியாலும் ஏற்பட்டது.சிறுவயதிலேயே திருக்கோயில் வழிபாட்டுப் பயிற்சியைப் பெற்றிருந்தார். செந்தமிழ் அறிவும் பெற்றிருந்தார். வேதப்பயிற்சியும் சடங்குகளின் விளக்கமும் அவரது பக்தியனுபவத்தை மேலும் வளர்த்தன. இதனால் சம்பந்தருடைய பாடல்களில் ஒரு தனித்துவம் வந்து சேர்ந்தது என்றால் அது மிகையாகாது.

நாள்தோறும் இறைவழிபாட்டை முறையாகச் செய்வோரது பக்தி நிலையை அவர் கண்டிருக்கிறார். அந்த வழிபாட்டில் மிக முக்கியமான நடைமுறைகளைத் தமது பாடலிலே குறிப்பிட்டுள்ளார். தூபமும் , தீபமும் காட்டி தொழுபவர்க்கு அருள் செய்யும் இறைவனைப் போற்றிப் பாடுகிறார். பழைய இலக்கியமான பரிபாடலில் வரும் வழிபாட்டு நடைமுறையிலும் தூபம், தீபம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்திலும் இம் முறைமை குறிப்பிடப்படுகிறது. பிராமணர் அல்லாத வரும் இறைவழிபாட்டைச் செய்யும் போது தூப, தீபம் காட்டிவழிபடும் மரபு ஒன்று தோன்றி இன்றுவரை நிலைபெற்றுள்ளது.

தூபம் என்பது புகையாகும். நறுமணப்புகையைச் சொரிந்து வழிபடும் போது வழிபாட்டுச் சூழல் தூய்மை பெறுகின்றது. தெய்வத் திருவுருவங்களுக்குத் திருமஞ்சனம் செய்த பின்னர் அகிற்புகையால் ஆராதனை நடைபெறும். அதன் பின்னர் தீப ஆராதனை நடைபெறும். தீபம் என்பது ஒளியைக் குறிக்கும். ஒளியிலே இறையுருவைக் கானும் போது அழகு நிலை தோன்றுகிறது. தீபத்திலே பல்வேறு வடிவினதாகத் தீபங்கள் உண்டு. அவற்றை ஏந்தி ஆராதனை செய்யும் போது ஏற்படும் பரவசம் பக்தியின் வெளிப்பாடாகும். இது ஒரு அற்புத அநுபவமாகும்.

இவ்வாறு நியமமாக வழிபடுவோருக்கு இறையருள் எளிதில் கிடைக்குமெனச் சம்பந்தர் கூறுகிறார். பூவும் புகையும் நீரும் சொரிந்து வழிபடும் போது பலியாக விளைபொருட்களையும் வைத்து வழிபடும் மரபும் தோன்றியது. இதனை மடையிடல் என்றும் கூறுவர். பூ மடை, காய்மடை என விளை பொருளின் வேறுபாட்டிற்கேற்பப் பெயர் சூட்டப்பட்டது. பின்னர்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

நறுந்தேனும் சேர்க்கப்பட்டது. இயற்கையாகக் கிடைக்கும் விளைபொருட்களை இறைவனுக்கு முதலில் மடையிட்ட பின்னரே மக்கள் பயன்படுத்தும் பண்பாடு ஒன்றும் தோற்றம் பெறலாயிற்று. எனவே கோயில் வழிபாடு இயற்கையோடு நெருங்கிப்பிணையலாயிற்று. இயற்கை வளம் நிறைந்த இடங்களிலேயே கோயில்கள் அமைக்கப்பட்டன. விளை பொருள் மடையோடு இறைவன் அருட்கொடையை நினைந்து நாவினால் நவின்று ஏத்தும் நிலையும் தோன்றியது. இப் போற்றுதலே தேவாரப்பாடல்களாக பக்தியனுபவம் கூறும் பாசுரங்களாகப் பரவின. சம்பந்தர் பாடல்களில் இயற்கை பற்றிய செய்திகள் அதிகமாக இருக்கும். எமது வாழ் நாள் முழுவதும் வழிபாட்டால் நலம் பெறலாம் என்பதை அப் பாடல் உணர்த்துகின்றது.

"பூவும் நீரும் பவியுஞ்சுமந்து புகலூரரையே
நாவினாலே நவின்றேத்தலோவார் செவித்துளைகளால்
யாவுங்கேளாரவன் பெருமையல்லால் அடியார்கள்தாம்
ஓவுநாளும் உணர்வொழிந்த நாள் என்று உளங்கொள்ளவே"

# தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2010 ஆம் கல்வி ஆண்டுக்கு ஆரம்பக் கல்வி, மனைப்பொருளியல், முதலாம் மொழி,இரண்டாம் மொழி ஆகிய பாடநெறிகளுக்கான நேர்முகத் தேர்வு 2010 ஆம் ஆண்டு ஜனவரி 2,3 ஆம் திகதிகளில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். அவர்களுக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**ஆரம்பக்கல்வி**

ஆர்.சின்னராசா -கொட்டடி, எஸ்.றொபின்ராஜ் - முள்ளியன், ஜே. ஜன்ஸ்ரன் -மானிப்பாய்,எஸ்.செல்லத்துரை -பருத்தித்துறை, பி.கீர்த்திகா -இணுவில், ஆர்.நிலக்ஷன்- ஏழாலை, ஆர்.வினிதா - சுன்னாகம்,கே. யதுப்பிரியா-யாழ்ப்பாணம், கே.தன்சிகா - யாழ்ப்பாணம்,கே.குகப்பிரியா-நெடுந்தீவு, கே.ஐங்கரன் -கரவெட்டி, இ.சுவீற்றி -சண்டிலிப்பாய் , பி.தர்ஷகா -திருநெல்வேலி, ஆர். சிந்துஜா - திருநெல்வேலி, கே.தயாநிதி - ஆனைக்கோட்டை, பி.கஜேந்திரகுமார் - கைதடி, எஸ். விஸ்ணுராஜா- புத்தூர், ஆர்.ரமணன் -அல்வாய், கே.தேவகின் - வல்வெட்டித்துறை,எஸ். கஜனி -கைதடி.

என்.பிருந்தா - புலோலி, எஸ்.டிலக்சா - நல்லூர், ஜி.சதாசிவம் -நல்லூர், கே.உதயராஜ் -வேலணை, ரி.கிருத்திகா -உடுப்பிட்டி.

ரி.மோகனதாஸ் -சுழிபுரம்,கே.சியாமளா - பருத்தித்துறை, பி.தினேஷ்குமார் -வேலணை, ரி.மயூரன் -சங்கானை, ஜே.கதிரைமலைநாதன்-யாழ்ப்பாணம்,என்.இராசரத்தினம் - அச்சுவேலி, சி.வி.கிறிஸ்தோபர் -குருநகர், ஜே.சபேசன் - கைதடி, எம்.ரட்ணம்-சுழிபுரம், எம்.விமலராஜ் -நெடுந்தீவு, பி.ராதிகா -வேலணை.

ரி.நிஷாந்தினி -அல்வாய், எஸ்.ஆனந்தராஜா -ஆவரங்கால், எம்.யோசெப்கென்சன்- சுண்டுக்குளி, பி.கலைவாணி-சுன்னாகம், எம்.ஜே.பி.கிறிஸ்தோபர்-யாழ்ப்பாணம், என்.ஜே ஜே.றொபேர்ட் -யாழ்ப்பாணம், ரி.வனஜா - கைதடி, எஸ்.பிருந்தன்-அல்வாய், எஸ்.சிவாஜினி - புலோலி, எஸ்.சதீஸ்வரன் -தெல்லிப்பளை, எஸ்.மேரிஜனனி -குருநகர், எஸ்.றம்ஜா -குப்பிளான், பி.தாரணி - சாவகச்சேரி, வி.வாசனா- கொடிகாமம், கெ. ஜெகதீசன்- யாழ்ப்பாணம், என்.வேணுகோபன் -பண்டத்தரிப்பு,எம்.நிசாந்தி -யாழ்ப்பாணம், ரி.கிருஷாலினி - சண்டிலிப்பாய், ரி.கேமினி - சுன்னாகம், ரி.கேதீஸ்வரன் -சுன்னாகம், ரி.அசோக்குமார் - மானிப்பாய்.

கே.சிவசோதி - அச்சுவேலி, ரி.சஞ்சீவி- சண்டிலிப்பாய், யு. பிரசாதனா-யாழ்ப்பாணம், எல்.லூட்சாலினி-யாழ்ப்பாணம், எஸ். செல்வராசா -சுன்னாகம், எஸ்.கௌசிகா- சுழிபுரம்,வி.பிருந்தா -யாழ்ப்பாணம்,ரி.மயூரன் -யாழ்ப்பாணம், எஸ்.விபூஷனி-யாழ்ப்பாணம், எஸ்.சிவனேஸ்வரன் -வல்வெட்டித்துறை, ரி.பாமினி - கரவெட்டி, எஸ்.ரவிச்சந்திரன் - சுன்னாகம்,ஆர்.ரகுதாஸ்-அல்வாய், ஆர். மயூரிகா - கரவெட்டி, கி.பிரியந்தன் - உரும்பிராய், கே.அனோஜன் -கைதடி.

ரி.பிரபு - வல்வெட்டித்துறை, ரி.புஸ்பராஜா -யாழ்ப்பாணம்,ரி.ரமணி-உடுப்பிட்டி, ஜெ. தயாநிதிவேல்-வல்வெட்டித்துறை, ஆர். ஜசிந்தம் -கரவெட்டி, பி.சிவரஜனி - வல்வெட்டித்துறை,ரி.ஜசிகா-பருத்தித்துறை, ஜி.கிறிஸ்ரீலா -அளவெட்டி, அர்ச்சனா -குடத்தனை, பி.கார்த்தீபன் -வல்வெட்டித்துறை, எம்.பேதுருப்பிள்ளை-நீர்வேலி, எம்.ஜே.ஏ.வின்சென்ற் - செம்பியன்பற்று.

எஸ்.ரஜிந்தன்- அல்வாய், கே.ராசதுரை - கரவெட்டி, எஸ்.ஜான்சி -முள்ளியவளை, வி.கனகேஸ்வரன் -மானிப்பாய், ஏ.மோகனரோகினி -வரணி, எஸ்.மாதுர்யா - ஏழாலை, ரி.செல்வதனா -வல்வெட்டித்துறை, ஏ.நிரோஷா -சுழிபுரம்,ரி.சண்முகதாசன் - சுழிபுரம், வை. காரண்யா - ஏழாலை, எஸ்.ஜனுசன்- புத்தூர்,ரி.கஸ்தூரி-அச்சுவேலி, வி. லவப்பிரியா -கைதடி, ஏ.கலைவாணி- மாதகல், எம்.டிலானி - கொக்குவில், எம்.பரமேஸ்வரன் -நாகர்கோவில், எஸ்.ஜனார்த்தனி -புத்தூர், பி.சுமிதா - சுழிபுரம், என்.வசந்தகாந்தன் -மீசாலை, வி.பிரதீபா- அரியாலை, ஆர்.ஜனிதா - வரணி,ஏ.இளங்கோ -பருத்தித்துறை, ரி.எழிலரசி -கரவெட்டி, ஆர்.கஜலக்ஷி -யாழ்ப்பாணம், ஏ.சியாமளன் - கரவெட்டி, பி. ஜசிகாந் -நீர்வேலி, எம்.சேனாதிராஜா -சுழிபுரம், எஸ்.நல்லையா - சண்டிலிப்பாய், எம். வினோஜா -சாவகச்சேரி,

யு.ரோகினி -வல்வெட்டித்துறை,ஆர். பாலசுப்பிரமணியம் - கோப்பாய், எஸ்.வினோதா - யாழ்ப்பாணம், பி.பரிதா -காரைநகர், ஆர். ரஜீந்திரன் -யாழ்ப்பாணம், ஜி.றொசானி - சண்டிலிப்பாய், எஸ்.யாழினி - மிருசுவில், யு.ஜெயநாதன் -அல்வாய், என்.பிலேந்திரகுமார் - அளவெட்டி,ஆர்.சுலோஜன் - மீசாலை, ரி.சற்குணசிங்கம் -சுன்னாகம்,சி.சோபன் - மல்லாகம்,ஏ.சீவரத்தினம் -பருத்தித்துறை.

எஸ்.மைதிலி - வல்வெட்டித்துறை, ஜெ. ஜனந்தன் - பருத்தித்துறை, பி.திருதிகா -காங்கேசன்துறை, எஸ்.சஞ்ஜீவ்-கரவெட்டி, ரி.துர்ஷிகா -வேலணை- 1, பி.பிரியதர்சினி -யாழ்ப்பாணம், எம்.பிரபாவதனி -மீசாலை, வி.நிரோஜினி - கொடிகாமம், கே.நகுலேஸ் வரக்குருக்கள் -மாதகல், பி.துஷ்யா - சுழிபுரம்.

எஸ்.லிசானி - உரும்பிராய், என்.பிரபாகர் - கோண்டாவில்,ரி.நிரோஜன் - நெடுந்தீவு, ஏ.ஜெயதீபன் -பொலிகண்டி, எஸ்.கார்த்திகா - கோப்பாய், என்.வைகுந்தவாசன் -கரவெட்டி, ஜெ.ரதீசியா - கரவெட்டி, கே.மேகலா -வல்வெட்டித்துறை, ரி.ஸ்ரீகந்தராஜா-யாழ்ப்பாணம், என்.விஜிதரன் - அல்வாய், எஸ்.சுரேஷ்- அல்வாய், என்.தர்சினி - யாழ்ப்பாணம், ரி.திருக்குமரன் -கோப்பாய், வி.மதன்ராஜ் - சுன்னாகம்,வி.கார்த்திகா - உரும்பிராய், கே.சுவர்ணவிழி -அச்சுவேலி, எஸ்.ஸ்ரீமதி - மானிப்பாய், எம்.மதியாபரணம் - கரவெட்டி.

**மனைப்பொருளியல்**

ஆர்.பானுஜா - கைதடி, எஸ்.பாஸ்கரன் -சண்டிலிப்பாய், எஸ் - கௌசல்யாதேவி - பருத்தித்துறை, எஸ்-சர்மிளா -சண்டிலிப்பாய், ஆர்.பாக்கியநாதன் -பண்டத்தரிப்பு, எஸ்.தேவகுமார் -கோப்பாய், கே.பிரசாலினி -வட்டுக்கோட்டை, கே.நிக்ஷா - கொக்குவில், என்.வாசுகி -தெல்லிப்பளை, கே.சசீலா - யாழ்ப்பாணம்,

ஏ.சுதர்சினி -சுன்னாகம், ஈ.மேரி ஜெனிற்றா -மாதகல், ஆர்.நிசா -இணுவில், பி.நிரோஜினி - சண்டிலிப்பாய், வி.அபிராமி - வவுனியா, ஏ.ஜே.வலன்ரீனா -ஏழாலை, ஜெ.டபிள்யூமேனகா - சுன்னாகம், கே.கபிலன் -சுன்னாகம், ஏ.விஜேந்தி - சாவகச்சேரி,

கே.சிந்துஜா - பருத்தித்துறை, ஜி.தயாளினி - சுன்னாகம், கே.குலமாலிகா - யாழ்ப்பாணம், எல்.மதியாபரணம் -நீர்வேலி, எஸ். யசோதா - சங்கானை, ரி.ஜெயந்தி -பண்டத்தரிப்பு, வி.சிவசுப்பிரமணியம் - கைதடி, ஜெ.சிரோமியா -கோப்பாய், எம்.மதியாபரணம் - மானிப்பாய், வி.மேரிதீபனா - சுன்னாகம், ரி.தயாராணி -சுழிபுரம், வி.அனிதா -வல்வெட்டித்துறை, ஏ.ஏ.மாசலா -யாழ்ப்பாணம், எஸ்.மேரி குஷேந்தினி -உரும்பிராய், ரி.தர்சினி - மானிப்பாய்,எஸ்.தஷ்யா -சண்டிலிப்பாய், எஸ்.தர்சினி -இளவாலை, கே.டி. ரஜினா - நெடுந்தீவு, ரி. யாழினி - சுன்னாகம், வி.ஜட்சினி - ஏழாலை,

பி.கனஜி - ஏழாலை, என்.மாதுரி - பருத்தித்தறை,என்.நர்மதா - கோப்பாய், ஏ.டிலானி - பருத்தித்துறை, ரி. குணரத்தினம் -மானிப்பாய், எம்.கோமளா -உடுப்பிட்டி, ஜெ.ஜி - ஆன்நிரோஷா -பண்டத்தரிப்பு, எஸ். ஏ.ஜோபிதா -யாழ்ப்பாணம், எஸ்.வேலுப்பிள்ளை - நீர்வேலி, ஜெ.எஸ்.யேசுதாசன் -இளவாலை,

ஆர்.கந்தசாமி -நீர்வேலி, எஸ்.எஸ்.மூர்த்தி -உடுவில், ஏ.றுசாந்தினி - இணுவில், ரி.கே. சொர்ணவதனா -வரணி. ஆர்.யூ.எஜ்.ஜெயந்தினி -கல்கமுவ, எஸ். பரணிகா -மல்லாகம், ரி. இன்பதாசன்- அச்சுவேலி, எஸ்.நடராசா - கோப்பாய், எம்.நிஷாந்தினி -யாழ்ப்பாணம், பி.துரையன் -அச்சுவேலி, எம்.எம். றொசாந்தினி -மாதகல், எஸ். கௌசலா - சுன்னாகம், ஆர்.டி.சோபனா - மானிப்பாய், ஏ.எல்.எஸ்.ஜான்சி -யாழ்ப்பாணம், எம்.முருதாளினி -அச்சுவேலி, ரி.கபிலாஜினி -சுன்னாகம், பி.சர்வகுணசீலன் -யாழ்ப்பாணம், என்.கசானா - யாழ்ப்பாணம், பி.கேஜா - சாவகச்சேரி, யு.ரஜீபன் - சுன்னாகம்.

**முதலாம் மொழி**

எஸ்.றொபின்ராஜ்-முள்ளியன், ஜெ. ஜான்ஸ்ரன் -மானிப்பாய், எஸ்.செல்லத்துரை -பருத்தித்துறை, கே.யதுப்பிரியா - யாழ்ப்பாணம், பி.தர்சிகா - யாழ்ப்பாணம், ஆர்.ரமணன் -அல்வாய், கே.தேவகின் - வல்வெட்டித்துறை, என்.பிருந்தா - புலோலி, ரி.கிருத்திகா - உடுப்பிட்டி ,எஸ்.சுஜீவன் -அச்சுவேலி,

ரி.மயூரன் -சங்கானை, எம்.இராசரத்தினம் -அச்சுவேலி, சி.வி.கிறிஸ்தோபர் - யாழ்ப்பாணம், ஜெ.பிறின்சி - நெடுந்தீவு, பி.ராதிகா - வேலணை, ரி.நிஷாந்தினி - அல்வாய், எஸ்.ஆனந்தராஜா - புத்தூர், எம்.ஜோசப்சன் - யாழ்ப்பாணம்.

**இரண்டாம் மொழி**

எஸ்.விஷ்ணுராஜா- புத்தூர், எஸ்.மிர்தா - புத்தூர், எஸ்.மாதுர்ஜா -ஏழாலை, ரி.கஸ்தூரி -அச்சுவேலி, எஸ்.வினோதா - யாழ்ப்பாணம், எஸ்.ஸ்ரீமதி -மானிப்பாய், வி.கே. தசிகரன் -வயாவிளான், வி. பரம்சோதி - மானிப்பாய், எஸ்.சுந்தரலிங்கம் -மானிப்பாய், ஏ.ஜானி -யாழ்ப்பாணம், பி. கனோல்ட் டெல்சன் -யாழ்ப்பாணம், கே.கஜீதா - மானிப்பாய், ஜெ.சர்மலா -அச்சுவேலி, ரி.பானுகா - தெல்லிப்பளை.

ரி.சுதாசன் -அச்சுவேலி, எஸ்.பிரமிளா - மானிப்பாய், எம்.ஜெயமறி -கரவெட்டி, எம். நிஷாந்தினி -கோண்டாவில், கே.நகுலன் - சுன்னாகம், ஆர்.அனுஷா -சுன்னாகம், எஸ்.சுதாகரன் -ஏழாலை, ரி.பூவிலிங்கம் - யாழ்ப்பாணம், எஸ்.பிரசாத் -கரவெட்டி, ஆர். நேசநாதன் - அரியாலைமேற்கு, ரி.கிறிஷோ -மானிப்பாய், பி.கார்த்திகா -நீர்வேலி, வி. அபிராமி - வவுனியா, வி.ஜெயபிரபானந்தி - யாழ்ப்பாணம்.

பி.செல்வராஜா - நீர்வேலி, ஏ.சதீஸ் - புத்தூர், ஏ.கௌசிகா - புத்தூர், கே.அமிர்தலிங்கம் - புத்தூர், ஜெ.ஜெயநிஷாந்தன் - அச்சுவேலி, ஏ.சிந்துஜா -புத்தூர், ஜெ.ஜெயரத்தினம் - புத்தூர், வி.கங்கைச்செல்வன் - மிருசுவில், ஆர்.பாலசுப்பிரமணியம் -கோப்பாய், யூ.சுஜானி -யாழ்ப்பாணம், ரி.சுரேகா - புத்தூர், ஏ.மோறன் சிறோமி - யாழ்ப்பாணம், எம்.மேரி அஜிதா - அச்சுவேலி, ஆர். மிரிலா -கோண்டாவில், கே. தனுர்சா -கோப்பாய், பி.மயூரணி -புத்தூர் , கே.ஜசிந்தா -பருத்தித்துறை, ரி.சிந்துசன் -யாழ்ப்பாணம், எஸ். ரஜிவ்னா - ஏழாலை, பி. சஞ்ஜீவ் -கரவெட்டி, எஸ்.கார்த்திகா - நீர்வேலி, எஸ்.தனுஜன் - கோண்டாவில், கே.யாழினி -சாவகச்சேரி, ஆர். கந்தசாமி -நீர்வேலி, ஜெ. ஆறுமுகம்- சாவகச்சேரி, வை.ஜோதேவ் -நீர்வேலி.


## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக் கிரியை அழைப்பு

கடந்த 26.11.2009 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்



தோற்றம் 30 06 1934

மறைவு 26 11 2009

**அமரர் கந்தையா பொன்னம்பலம்**

(முன்னைநாள் அரசாங்க அதிபர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 25.12.2009 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் காரைநகர் புனிதத் தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை 26.12.2009 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'தில்லைவாசா'
இல.86,மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(117)

# சதம் அடித்தனர் ஹோலி, காம்பீர்; இந்தியா தொடரைத் தனதாக்கியது

(கொல்கத்தா)

காம்பீர்–ஹோலி ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 7 விக்கெட்டுக்களால் இலங்கை அணியை வீழ்த்தித் தொடரை 3:1 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், இருபது–20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இந்திய அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் தொடர்ந்து நடைபெற்ற இருபது–20 தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையானது.

இந் நிலையில் தொடர்ந்து நடைபெற்ற ஒரு நாள் தொடரின் முதல் மூன்று போட்டிகளின் முடிவில் இந்திய அணி 2:1 என்றகணக்கில் முன்னிலை பெற்றது.

இத் தொடரில் 4–வது ஒரு நாள் போட்டி நேற்று கொல்கத்தா ஈடன்காடன் மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.


ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்சான் 9 ஓட்டங்களுடன் நெகராவின் பந்து வீச்சில் ஹோலியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 8 ஓவர்களில் 31 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து அணியில் மீண்டும் வாய்ப்புப் பெற்ற சனத் ஜெயசூரியா களமிறங்கினார். மறுமுனையில் தரங்க சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இலங்கை அணி 11.1 ஓவர்களில் 50 ஓட்டங்களைத் தொட்டது.

இதில் சனத் ஜெயசூரியா 15 ஓட்டங்களை எடுத்தபோது சகீர்கானின் பந்து வீச்சில் டெண்டுல்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் 3–வது விக்கெட்டுக்காகத் தரங்கவுடன் இணைந்த சங்கக்கார சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இலங்கை அணி 17.2 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்க 45 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார். இந்த ஜோடியைப் பிரிக்க அணித் தலைவர் சேவாக் களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்காமல் போக இலங்கை அணி 28.4 ஓவர்களில் 150 ஓட்டங்களை எட்டியது.



இதில் அணித் தலைவர் சங்கக்கார 64 பந்துகளில் அரைச் சதத்தைக் கடக்க மறுமுனையில் உபுல் தரங்க 114 பந்துகளில் தனது 7–வது ஒரு நாள் சதத்தை அடித்து அசத்தினார்.

இந்த ஜோடி 3–வது விக்கெட்டுக்காக 23.4 ஓவர்களில் 126 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித் தலைவர் குமார் சங்கக்கார 72 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 60 ஓட்டங்களை எடுத்து ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் கார்த்திக்கினால் ஸ்ரொம் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய மஹேல ஜெயவர்த்தன அதிரடியாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் ஆரம்பம் முதல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய உபுல் தரங்க 128 பந்துகளில் (14பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் அடங்கலாக) 118 ஓட்டங்களை எடுத்து சகீர்கானின் பந்து வீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அறிமுக வீரர் பெரேரா அதிரடியான ஆட்டத்தை வழங்க இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை எகிறியது.

எனினும் பெரேரா 14 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 31 ஓட்டங்களை எடுத்து நெகராவின் பந்து வீச்சில் ஜடேஜாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கண்டாம்பி களமிறங்க மறுமுனையில் மஹேல ஜெயவர்த்தன 30 பந்துகளில் (5பவுண்டரிகள் உட்பட) 33 ஓட்டங்களை எடுத்து ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 315 ஓட்டங்களைக் குவித்தது. இதில் கண்டாம்பி 15 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 23 ஓட்டங்களையும் சமரவீர 7 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 13 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் சகீர்கான், ஆஷஸ் நெகரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 316 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்ப ஜோடி ஏமாற்றியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அணித் தலைவர் விரேந்திர சேவாக் 10 ஓட்டங்களுடனும் சச்சின் டெண்டுல்கர் 8 ஓட்டங்களுடனும் லக்மாலின் பந்து வீச்சில் வெளியேற இந்திய அணி 3.4ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் 3–வது விக்கெட்டுக்காக இணைந்த காம்பீர்–ஹோலி ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தினை வழங்க இந்திய அணி சரிவிலிருந்து மீண்டெழுந்தது.

இந்த ஜோடி அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 15.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது. இதில் ஹோலி 52 பந்துகளிலும் காம்பீர் 51 பந்துகளிலும் தமது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தனர்.

இந்த ஜோடியைப் பிரிக்க அணித் தலைவர் சங்கக்கார பந்து வீச்சிலும் களத்தடுப்பிலும் பல வியூகங்களை அமைத்தபோதும் கைகூடாமல் போக இந்திய அணி 31.4 ஓவர்களில் 200 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் விராட் ஹோலி 110–வது பந்தில் தனது கன்னி ஒரு நாள் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்த மறுமுனையில் கௌதம் காம்பீரும் 101 பந்துகளில் தனது 7–வது ஒருநாள் சதத்தை அடித்தார்.

இந்த ஜோடி 3–வது விக்கெட்டுக்காக 35.4 ஓவர்களில் 224 ஓட்டங்களை இணைப்பாட்டமாகக் குவித்தபோது விராட் ஹோலி 114 பந்துகளில் (11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 107 ஓட்டங்களை எடுத்து ரான்டீவ்வின் பந்து வீச்சில் பதில் வீரர் புஷ்ப குமாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


அடுத்து இணைந்த காம்பீர்–கார்த்திக் ஜோடி அதிரடியைத் தொடர இந்திய அணி 48.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 317 ஓட்டங்களைக் குவித்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் கௌதம் காம்பீர் 137 பந்துகளில் (14 பவுண்டரிகள் உட்பட) 150 ஓட்டங்களையும் தினேஷ் கார்த்திக் 22 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 19 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் லக்மால் 2 விக்கெட்டுக்களையும் ரான்டீவ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இவ்வெற்றின் மூலம் இந்திய அணி ஒரு நாள் தொடரை 3:1 என்ற கணக்கில் தனதாக்கியது.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு வழியமைத்த காம்பீர் ஆட்ட நாயகனாகத் தெரிவானார். இத் தொடரின் 5–வதும் இறுதியுமான போட்டி நாளை மறுதினம் நடை பெறுகின்றது.

# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து பொன்ட் விடை பெறுகின்றார்



(வெலிங்டன்)

டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார் நியூசிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ஷேன் பொன்ட்.

நியூசிலாந்துக் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் ஷேன் பொன்ட் கடந்த 2001 ஆம் ஆண்டு டெஸ்ட் அரங்கில் காலடி வைத்த இவர் இதுவரை 18 போட்டிகளில் மட்டுமே விளையாடி 87 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார்.

கடைசியாக சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக டுனிடினில் நடந்த முதல் டெஸ்டில் விளையாடினார். அப்போது வயிற்றுவலியால் அவதிப்பட்ட பொன்ட் தொடரில் இருந்து நீக்கப்பட்டார்.

இந் நிலையில் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக பொன்ட் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது,

அடிக்கடி காயத்தால் அவதிப்பட்டு வருவது வருத்தம் அளிக்கின்றது. 5 நாள்கள் கொண்ட டெஸ்டில் பங்கேற்க எனது உடல் ஒத்துழைக்கவில்லை.

டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றதன் மூலம் அடிக்கடி காயமடைந்துள்ளேன். இதனால் ஓய்வு பெற முடிபு செய்துள்ளேன். இருப்பினும் ஒரு நாள் மற்றும் இருபது–20 போட்டிகளில் பங்கேற்க விரும்புகின்றேன். இவ்வாறு பொன்ட தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்த இலங்கைக் கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரியா வணிகர் கழக பிரதிநிதிகளுடன் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# மீண்டும் வருகிறார் சூமாக்கர்

(பேர்லின்)

போர்முலா –1 கார் பந்தயங்களில் மீண்டும் பங்கேற்கவுள்ளார் ஜேர்மனியின் மைக்கல் சூமாக்கர். இந்த முறை மெர்சிடஸ் அணிக்காகக் களமிறங்குகின்றார் போர்முலா –1 கார் பந்தயங்களில் 7 முறை உலக சம்பியன் பட்டம் வென்றவர் மைக்கல் சூமாக்கர்.

கடந்த 2006 ஆம்ஆண்டு காயம்காரணமாக இவர் ஓய்வு பெற்றார். இந் நிலையில் எதிர்வரும் 2010 ஆம் ஆண்டு மீண்டும் போட்டிகளில் பங்கேற்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதி 41 வயதை எட்டவுள்ள இவர் மார்ச் மாதம் நடக்கவுள் பஹரைன் கிராண்ட்பிரிக்ஸ் தொடரில் மீண்டும் கால் பதிக்கவுள்ளார்.

இதுவரை பெராரி அணிக்காக பங்கேற்று வந்த இவர் இந்த முறை மெர்சிடஸ் அணிக்காகக் களமிறங்கவுள்ளார். 3 ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் மெர்சிடஸ் அணி சூமாக்கருக்கு இலங்கை ரூபாயில் 120 கோடி வழங்கியுள்ளது.



இது குறித்து சூமாக்கர் கூறுகையில்; 3 ஆண்டுகளுக்குப் பின் கிராண்ட்பிரிக்ஸ் தொடரில் மீண்டும் பங்கேற்கவுள்ளேன். கழுத்துப் பகுதியில் ஏற்பட்ட காயத்திலிருந்து விரைவாகக் குணமடைந்து வருகின்றேன்.

இதனால் காயம் ஒரு பிரச்சினையல்ல என்றார். இது வரை 250 கிராண்ட்பிரிக்ஸ் பந்தயங்களில் பங்கேற்றுள்ள சூமாக்கர் 91 வெற்றிகளைப் பெற்றுள்ளார்.

# தமிழ் மக்களின் நலன் கருதியதாகவே...

கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை காலை தமிழ் பத்திரிகையாளர்களை சந்தித்து ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக விளக்கமளித்தபோது இரா.சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பாக மிகவிரைவில் கூட்டமைப்பு அறிவிக்கும். சிவாஜிலிங்கம் பொது வேட்பாளராக போட்டியிட எடுத்த தீர்மானம் தன்னிச்சையானது. அது குறித்து கவலையடைகின்றோம். ஆனாலும் தமிழ் மக்கள் குழப்பமடைய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

இரண்டு பிரதான வேட்பாளர்களுடனும் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசனைகள் தொடர்பாக பேசிவருகின்றோம். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ்பிரேமச்சந்திரன், துரைரெட்ணசிங்கம், கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகியோர் இந்த சந்திப்புகளில் கலந்து கொண்டுள்ளனர் அதில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் இணைப்பு மிகவும் முக்கியமானது என வலியுறுத்தி வருவதாகவும் சொன்னார்.

இரண்டு வேட்பாளர்களையும் சந்தித்த போது முன்வைத்த விடயங்கள் தொடர்பாக சம்பந்தன் பின்வருமாறு கூறினார்.

தமிழ் மக்களுடைய சகலவிதமான பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான அதாவது உடனடியாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வீட்டு வசதி, தொழில் வாய்ப்பு, சமூக கட்டமைப்பு போன்ற விடயங்கள்.

வடக்கு கிழக்கில் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு அங்கு மக்கள் மீளக்குடியேற உடனடி ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். யுத்தம் முடிபடைந்துவிட்ட நிலையில் அவ்வாறான ஒரு உயர் பாதுகாப்பு வலயம் தேவையில்லை.

யுத்தம் முடிபடைந்த நிலையிலும் வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கல் மற்றும் சோதனை சாவடிகள் இராணுவ கட்டமைப்புகள் யுத்த முனைப்புகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் உள்ள காணிகள் அபிவிருத்தி திட்டங்கள் என்ற பெயரில் யாருக்கும் விநியோகம் செய்யப்படுமானால் அவ்விதமான ஒழுங்குகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் பெரும்பான்மை இனங்கள் வடக்கு கிழக்கிலுள்ள அரச காணிகளில் குடியமர்த்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் எனவும் யுத்தத்தினால் வெளியேறிய தமிழர்களின் காணிகளில் பெரும்பான்மை இன மக்கள் குடியேற்றப்படும் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

அதேவேளை வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் காணிகளின் உரிமை பத்திரங்களை நீக்குவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

அதேவேளை வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் காணிகளின் உரிமை பத்திரங்களை நீக்குவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

தடுப்பு காவலில் உள்ள தமிழ் இளைஞர்கள் யுவதிகளுக்கு சாட்சியங்கள் இல்லையானால் அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். ஏனையவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் யாரையாவது சட்டத்தின் முன்நிறுத்த வேண்டுமானால் அவர்களை உடனடியாக சட்டத்தின் முன்நிறுத்தி விடுதலை செய்ய வேண்டும்.

தமிழ் மக்கள் தமது அரசியல் பொருளாதார கலாசார விடயங்களை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கு ஏற்ற வகையில் நிரந்தரமான நீதியான நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை ஜனாதிபதி தேர்தல் முடிபடைந்ததும் முன்வைக்க வேண்டும்.

இந்த முக்கியமான விடயங்கள் தான் கூட்டமைப்பினால் முன்நிலைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மேற்குறித்த இந்த விடயங்கள் தொடர்பான இரண்டு பிரதான வேட்பாளர்களின் கருத்துக்களையும் அறிந்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். ஆராய்கின்றனர்.

அத்துடன் இவ்வாறான தீர்வுகள் ஏற்படுத்துவதற்கு இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் உதவிகளும் தேவை. அது தொடர்பாக அவர்களுடனும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடி வருகின்றனர்.

மேற்குறித்த விடயங்களை உறுதிப்படுத்தக் கூடிய வேட்பாளருக்குத்தான் ஆதரவை வழங்க முடியும்.

எவ்வாறாயினும் இந்த விடயங்கள் தொடர்பான தீவிரமான கவனத்திற்கு உட்பட்டிருக்கின்றமையினால் தமிழ் மக்கள் இன்னமும் சிறிது காலத்துக்கு பொறுமையுடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு நல்ல சந்தர்ப்பம் எனவே மக்கள் நிதானமாக செயற்பட வேண்டும் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இது அவர்களுடைய புனித கடமை என்றுதான் கருதுகின்றோம். மக்கள் எந்தவிதமன குழப்பங்களும் அடைய வேண்டிய அவசியம் இல்லை என்றார். (ச-5)

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கடன் பெற பேச்சுவார்த்தை

இலங்கை அரசாங்கம் மேலதிகமாக கடன் தொகை ஒன்றை பெறும் பொருட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து 150 மில்லியன் டொலர்கள் பெறும் நோக்கில் பேச்சுவார்த்தைகள் இடம் பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கில் மீள்குடியேற்றப்படும் பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இவ் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. குறிப்பாக மீள்குடியேற்றப்படும் பிரதேசங்களில் பல்வேறு புதிய வேலைத் திட்டங்களுக்கு இக் கடனுதவி பயன்படுத்தப்படும்.

அரசாங்கம் மேலதிகமாக கோரியுள்ள 150மில்லியன் கடன் தொகை கிடைக்கப் பெறும் பட்சத்தில் இந்நிதி 2010ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் வடகிழக்கு அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இவ்நிதி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மின்சார மற்றும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும். (ச-3)

## கூட்டமை...

செய்தல், மீள்குடியமர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடமைப்பு, வடக்கு கிழக்கு மீள்கட்டுமான பணிகளை விரைவாக ஆரம்பித்தல், கிழக்கில் புதிய குடியேற்றங்களை நிறுத்துதல், அரசியல் தீர்வு நோக்கிய பேச்சுவார்த்தை ஆகிய இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு எழுத்து மூலமாக உறுதிப்பாடு தரவேண்டும் என்று கூட்டமைப்பினர் கேட்டுள்ளனர். அதற்கு சரத் பொன்சேகா இணங்கியுள்ளராம் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஜெனரல்...

சில்வா போன்ற தளபதிகள் களத்தில் நின்று கொண்டிருக்க பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ சிறந்த முறையில் யுத்தத்தை நிறைவு செய்தார். ஆனால் தற்போது சரத் பொன் சேகாவுக்குள் பிரபாகரனின் ஆவி புகுந்துள்ளது. தற்போது பிரபாகரன் செயற்பட்டது போன்றுதான் சரத் பொன்சேகாவும் செயற்படுகின்றார் என அவர் மேலும் கூறினார். (ச-5)

## முகாமிலிருந்து...

சுதந்திரமாக நடமாட அனுமதியளித்த பின்னர் முகாமிலிருந்து ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 169 பேர் தமது உறவினர்களைச் சந்திப்பதற்காக முகாமிலிருந்து வெளியே சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ச)

## பழுதடைந்த...

நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே யாழ்.குடாநாட்டில் எந்தவொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் இவ்வாறான பழுதடைந்த, மக்கள் பாவனைக்கு உதவாத அரிசி வழங்கப்பட்டால் உடனே தனது கவனத்திற்குக் கொண்டு வருமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

## பொன்சேகா...

பதாகைகளை ஆர்ப்பாட்டகாரர்கள் ஏந்தியிருந்தனர் இராணுவத்தைக் காட்டிக் கொடுத்த சரத்பொன்சேகா, தேசதுரோகி பொன்சேகா, சிறிலங்காவை சர்வதேச சக்திகளுக்கு அடகு வைக்க முற்படும் பொன்சேகா என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசங்களை எழுப்பினர்.(ச-3,5)

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினால் 25.12.2009 இன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 24.01. 2010ஆம் திகதி லயன் கலாநிதி சாந்தனின் வதிவிடத்தில் பிற்பகல் 4.00மணிக்கு குலுக்கல் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:-தலைவர்

(133) மா.பரிஷ் லயன்ஸ் கழகம்.


புதியபிரிவுகள் ஆரம்பம்

ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Graphics Design
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes

ஏனைய கற்கை நெறிகளுக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.




முழுமையான கணணிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903



STUDY WITH WORK IN UK

A/L பரீட்சை முடிந்ததும் அடுத்தது என்ன?
கவலையை விடுங்கள் !
அங்கீகாரம் பெற்ற College/University களில்
புதிய வீசா நடைமுறைகளிற்கு அமைய Visa Process
செய்து தரப்படும்.




பெப்ரவரி ஏப்ரல் 2010 ற்கான பதிவுகளை
தற்போது மேற்கொள்ள முடியும்.

தற்போதுள்ள இலகுவான வீசா நடைமுறையை பயன்படுத்த தவறாதீர்கள்.

அனைத்து கற்கை நெறிகளுக்குமான அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

B.F.C Services
T.P.0212226113, 0776147174
No 01, பிறவுண் வீதி.யாழ்ப்பாணம்.
(ARRUL GLOBAL EXPRESS) அருகாமையில்.


## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா வல்லிபுரம் (வல்லிக்கோன்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா வல்லிபுரம் அவர்கள் 20.12.2009 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.12.2009 நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
மகள்
பேராசிரியர் கலைவாணி-இராமநாதன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
மகன்
வாசவன்-வல்லிபுரம்
கணக்காளர், யூனிவேர்சல் பிறைவேற் லிமிற்டெட், கொழும்பு.

றொட்டியாலடி
அம்பலவாணர் வீதி,
1ஆம் குறுக்கு ஒழுங்கை,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(இ)


அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

மானிப்பாயில்......



BAJAJ



றஞ்சிற் மெக்கானிக் & சேவிஸ் சென்ரர்

RRSC Motor Engineers

பஜாஜ் வாடிக்கையாளர்களுக்கு உத்தரவாத இலவச சேவீஸ்
உத்தரவாத சேவையைப் பெற்றிட

றஞ்சிற் மெக்கானிக் & சேவிஸ் சென்ரர்

டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் உத்தரவு பெற்ற உதிரிப்பாக விற்பனையாளரும் சேவை முகவரும்

யாழ் வீதி, மானிப்பாய்.
T.P.: 077 3107549
021 3737808

(C-4039)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.